Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 08, 2024

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 08, 2024 | ஒளி: 10 கதிர்: 067 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# “கூட்டணியில் சேர மாட்டோம்”

எஸ்.ஆர்.லெம்பேட்

கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் மற்றும் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தவர்கள் உள்ள கூட்டணியில் இணைய போவதில்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் மன்னார், மாந்தை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தவறு செய்தமைக்காக கட்சியிலிருந்து விலக்கப்பட்ட சிலர், இன்று தாமாகவே கட்சியிலிருந்து வெளியேறியதாகக் கூறித்திரிகின்றனர். தவறு செய்தவர்கள் உடனடியாக கட்சியிலிருந்து நீக்கப்படுவர். இவ்வாறு தவறு செய்த மூன்று எம்.பிக்களை எமது கட்சி நீக்கியுள்ளது.

இதுபோலவே, கிண்ணியாவைச் சேர்ந்த ஒருவரையும் நாம் நீக்கியுள்ளோம். இன்று அவர் ரணிலுடன் இணைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

“சில மாவட்டங்களில் தனித்தும் இன்னும் சில மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் போட்டியிடும். எம்மால் நீக்கப்பட்டவர்களைச் சேர்த்து உருவாக்கப்படும் கூட்டணியில் நாம் சேர மாட்டோம்”



# தாமரை கோபுரத்தில் இருந்து விழுந்து மாணவி பலி



கொழும்பு- தாமரை கோபுரத்தின் கண்காணிப்பு தளத்தில் இருந்து முன்னணி சர்வதேச பாடசாலை ஒன்றின் மாணவி ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டெக்கில் ஒரு ஜோடி காலணிகள் மற்றும் பாடசாலை பை ஒன்று காணப்பட்டதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

CCTV காட்சிகளின் படி, மாணவி கோபுரத்தின் 29ஆவது மாடியில் இருந்து குதித்துள்ளதாக கொழும்பு லோட்டஸ் டவர் மேனேஜ்மென்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் உறுதிப்படுத்தியுள்ளது.

முதற்கட்ட விசாரணைகளின் படி இது தற்கொலையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலியானவர் 18 முதல் 20 வயதுடையவர் என நம்பப்படுகிறது. தெரிவித்த பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காத்தான்குடி மாணவி கொழும்புக்கு வருகிறார்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடியிலிருந்து கொழும்பு வரையான துவிச்சக்கர வண்டி பயணத்தை காத்தான்குடி பத்ரியா வித்தியாலயத்தில் பத்தாம் தரத்தில் கல்வி கற்கும் பாத்திமா நதா என்ற மாணவி திங்கட்கிழமை (07) காலை ஆரம்பித்துள்ளார்.

போதைப்பொருள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் எதிர்கால சந்ததிகளை போதைவஸ்திலிருந்து

தொடர்ச்சி P2



# யாழில் வீணையில் வேட்பு மனுத் தாக்கல்



நிதர்ஷன் வினோத்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் யாழ். மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை (07) தாக்கல் செய்தனர்.

முன்னாள் அமைச்சரும், கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனது வீணை சின்னத்தில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# லோஷன் போட்டி



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில், கொழும்பு மாவட்டத்தில் பிரபல அறிவிப்பாளர் ஏ.ஆர்.வி. லோஷன் போட்டியிடுகின்றார்.

# ரவிராஜின் பாரியார் சசிகலா ‘சங்கில்’ போட்டி



ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பெண் வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் இரவிராஜ் அவர்களின் பாரியார் திருமதி சசிகலா ரவிராஜ் வேட்புமனுவில் கையெழுத்திட்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான சசிகலா கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்திருந்தார்.

தொடர்ச்சி P2

# ஆசிய அபிவிருத்தி வங்கியும் உதவியது

இலங்கையின் சுற்றுலா, வலுசக்தி மற்றும் சிறு தொழில்துறைகளின் அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்துள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதி விட பிரதிநிதி டகபூமி கடோனோவை (Takafumi Kadono) ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (07) சந்தித்துக் கலந்துரையாடினார்.



தொடர்ச்சி P2

# “ரணிலின் பாதுகாப்பு வாபஸ் பெறவில்லை”

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை இலக்கு வைத்துப் பல அவமானகரமான தவறான தகவல்கள் பரப்பப்பட்டு வருவதாகவும், அதனைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன,



தொடர்ச்சி P2

## ஜே.வி.பி. தீர்த்து விடும் என்கிற

# “நம்பிக்கையே எனக்கில்லை”



எஸ்.ஆர்.லெம்பேட்

ஜே.வி.பி. தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்க்கின்ற, அல்லது தீர்த்து விடும் என்கிற நம்பிக்கை எனக்கில்லை. அவர்கள் தற்போது தேர்தல் ஆசனங்களைக் கூடுதலாகக் கைப்பற்ற வேண்டும் என்று சில நடவடிக்கைகளை எடுக்கின்றனர் என ரெலோ தலைவரும்,வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் திங்கட்கிழமை(7) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ச்சி P2

# கல் விழுந்ததில் சிறுவன் மரணம்

தனது வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது, மலையிலிருந்து விழுந்த பாறையினால் தலையில் பலத்த காயம் அடைந்த 11 வயது மாணவன், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக நூரிய பொலிஸார் தெரிவித்தனர். கித்துல்கல, பல்லேபாக பகுதியைச் சேர்ந்த 11 வயதுடைய பஹான் சங்கல்பா என்ற மாணவனே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

தொடர்ச்சி P2

# 200மில். டொலர்கள் வழங்க அனுமதி

இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைக்கும் வகையில் உலக வங்கி குழுமத்தின் (WBG) சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் (IDA) மேலும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



# ‘எரான்’ குழு ஆராயும்

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் அறிவுறுத்தலின்படி, கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அவர்களால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

2024 பொதுத் தேர்தலுக்கு ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பாக வேட்புமனுத் தாக்கல் செய்ய முன்வந்துள்ள நபர்களுக்கு பல்வேறு

தொடர்ச்சி P2

## பிரமுகர்களின் பாதுகாப்பு சேவையில் இருந்து 1,145 உத்தியோகத்தர்கள்

# அதிரடியாக மாற்றம்

பிரமுகர்களின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த 1,145 உத்தியோகத்தர்கள் பிரமுகர்களின் பாதுகாப்பு சேவையில் இருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை (06) முதல் பொது கடமைகளுக்காக பொலிஸ் நிலையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "கூட்டணியில் சேர மாட்டோம்"

மட்டுமல்ல, கட்சியிலிருந்து அவர்தான், வெளியேறியதாக ஊடகங்களுக்குக் கூறுகிறார். மக்கள் ஆணையை மீறியவர்களுக்கு மக்களே பாடம் புகட்டுவர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது கட்சி அம்பாறை மாவட்டம் உட்பட பல மாவட்டங்களில் போட்டியிடும். சில மாவட்டங்களில் தனித்தும் இன்னும் சில மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் போட்டியிடும். எம்மால் நீக்கப்பட்டவர்களைச் சேர்த்து உருவாக்கப்படும் கூட்டணியில் நாம் சேர மாட்டோம்.

இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்து, ஜனாஸாக்களை எரிப்பதற்கு உதவியவர்கள் உள்ள கூட்டணியிலும் எமது கட்சி இணையாது. அம்பாறை மாவட்டத்தில், இவ்விடயம் தான் இழுபறியில் உள்ளது. இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் உள்ள அணியில், நாம் இணையப் போவதில்லை.

இவர்களைச் சேர்த்தால் அம்பாறையில் தனித்தே மயில் சின்னத்தில் போட்டியிடுவோம். புத்தளம் மாவட்டத்திலும் இந்த நியதியே பின்பற்றப்படும். இது குறித்து தீர்க்கமான முடிவை எடுக்குமாறு கட்சியின் புத்தளம் மாவட்ட உயர் பீடத்துக்கு அறிவித்துள்ளோம்" என்று குறிப்பிட்டுள்ளார்

# "ரணிலின் பாதுகாப்பு வாபஸ் பெறவில்லை"

கொழும்பில் திங்கட்கிழமை (07) ஊடகங்களுக்கு விசேட கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ரணில் விக்கிரமசிங்கவும் திருமதி மைத்திரி விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி மாளிகையை தனிப்பட்ட பயன்பாட்டிற்குப் பயன்படுத்தியதில்லை என்பதுடன், ஆடம்பர உணவு மற்றும் வெளிநாட்டு சமையல்காரர்களின் சேவைகள் தொடர்பாகத் தவறான மற்றும் முற்றிலும் அரசியல் வெறுப்புணர்வுடன் கீழ்த்தரமான அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன என்றார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த நாட்டுக்காகப் பல பணிகளைச் செய்துள்ளார். அத்துடன், கடந்த காலத்தில் வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பொருளாதாரத்தைச் சாதகமான பக்கம் திருப்பினார். ஆனால் அவரை குறிவைத்து சில அவமானகரமான தவறான தகவல்களைப் பரப்பப்படுகின்றன.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் நீக்கப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது அது முற்றிலும் பொய்யானது. தற்போதைய அரசாங்கம் காலத்தை விரயம் செய்யாமல் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைய அவர்களின் நம்பிக்கைகளை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

# ரவிராஜின் பாரியார் சசிகலா 'சங்கில்' போட்டி

இத் தேர்தலில் தமிழரசுக் கட்சியே தனக்கு எதிராக சதி செய்ததாக சசிகலா குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், கட்சி மீதும் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி வந்திருந்தார்.

இவ்வாறான நிலையில் இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் தமிழரசில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்திருந்தார். ஆனாலும் தமிழரசில் அவருக்கு வேட்பாளர் நியமனம் கொடுக்கப்படவில்லை.

தமிழரசுக் கட்சியின் இந்த வேட்பாளர் தெரிவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அடாவடித்தனமாக பல்வேறு குழறுபடிகளைச் செய்து தனக்கு வேண்டியவர்களுக்கு நியமனத்தைக் கொடுப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமையவே சசிகலாவிற்கு மட்டுமல்லாது, கட்சியின் நீண்டகால உறுப்பினர்கள் பலருக்கும் வேட்பாளர் நியமனம் கொடுக்கப்படாமல் தனக்குத் தேவையானவர்களிற்கே சுமந்திரன் நியமனம் கொடுப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்நிலையில், தற்போது தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறி ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சின்னமான சங்குச் சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் திங்கட்கிழமை(07) கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிய அபிவிருத்தி வங்கியும் உதவியது

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுவரும் அனைத்து ஒப்பந்தங்களும் அவ்வண்ணமே முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ (Takafumi Kadono) தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்காக சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு அவசியமான வசதிகளுக்கான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

அதன்படி சுற்றுலாத்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை மேம்படுத்த உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ இணக்கம் தெரிவித்தார்.

அதேபோல் இலங்கையில் வலுவச்தி மற்றும் சிறு தொழில் முயற்சிகளை மேம்படுத்தத் தேவையான நிதி உதவிகளை வழங்கவும், நிதித் துறையின் முன்னேற்றத்துக்குத் தேவையான நிதி உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான முன்னெடுப்புக்களின் பிரதானி சொல்பொத் மெம்பேடோவா (Cholpon Mambetova), நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பணிப்பாளர் நாயகம் டீ.ஏ.பி.அபேசேகர, பணிப்பாளர் உதேனி உடுகஹபத்துவ, சிரேஷ்ட பொருளாதார அதிகாரிகளான ஹஷிதா விக்ரமசிங்க மற்றும் லக்ஷினி பெர்னாண்டோ ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# 'எரான்' குழு ஆராயும்

தரப்பினரால் முன்வைக்கப்பட்டு வரும் ஆட்சேபனைகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி சட்டத்தரணிகளானதினால் பிலிப், நளின் திசாநாயக்க மற்றும் எஸ்.டி.ஜயநாத ஆகியோர் இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ள ஏனைய உறுப்பினர்கள் ஆவர். இக் குழுவின் அறிக்கையை உடனடியாக கட்சியின் வேட்புமனு குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# காத்தான்குடி மாணவி கொழும்புக்கு வருகிறார்

பாதுகாக்கும் வகையிலும் இந்த துவிச்சக்கர வண்டி பயணத்தை ஆரம்பித்துள்ளார் . இந்த மாணவியுடன் அவரின் தாய் மற்றும் உறவினர்கள் சிலரும் முச்சக்கர வண்டியில் செல்கின்றதுடன், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (13) அன்று கொழும்பில் பயணத்தை முடிவுறுத்தி திங்கட்கிழமை(14) அன்று ஜனாதிபதி அனுரகுமாரவிடம் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "நம்பிக்கையே எனக்கில்லை"

தமிழ்த் தேசிய கட்டமைப்பு சார்பாக சங்குச் சின்னத்தில் நாங்கள் போட்டியிடுகின்றோம். வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், வேட்பாளர்களை நாங்கள் தெரிவு செய்துள்ளோம். அம்பாறை மற்றும் திருகோணமலை பிரதேசங்களில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான ஒப்புதலை வழங்கி உள்ளோம்.

தென்பகுதி மக்கள் அங்குள்ள அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊழலுக்கு எதிராக ஜே.வி.பி கட்சிக்கு வாக்களித்துள்ளனர்.அந்த அலை தற்போது எங்களிடம் பரவியுள்ளது. ஜே.வி.பி உடன் இணைந்து போட்டியிடுவதில் எமது இளைஞர்கள் ஆர்வத்துடன் இருக்கின்றனர். ஆனால், ஜே.வி.பி.தமிழ் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்க்கின்ற, அல்லது தீர்த்து விடும் என்கிற நம்பிக்கை எனக்கில்லை என்றார்.

அந்த வகையில் எமது இனப் பிரச்சினையாக இருக்கலாம்,எமது நிலங்கள் அபகரிக்கப் படுகின்ற விடையங்களாக இருக்கலாம்,கடந்த காலங்களில் அனுபவித்த துப்பாக்கிச் சத்தங்கள் இல்லாத எமது தேசத்தை அனுபவிக்கின்ற நிலைப்பாடுகளை இந்த ஜே.வி.பி. அரசாங்கம் நிறுத்துமா? என்கிற கேள்வி இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# "தமிழரசுக்கட்சி வேட்பாளராக போட்டியிட விரும்பவில்லை"

## சட்டத்தரணி வீ.எஸ்.எஸ்.தனஞ்சயன்

க.அகரன்

கடந்த சில நாட்களாகக் கட்சி சார்ந்து நடைபெறுகின்ற சங்கடம் தருகின்ற விடயங்கள் அந்தக் கட்சி ஊடாக பயணிப்பதன் ஊடாக எங்கள் மக்கள் சார்ந்து எதிர்காலத்தில் பணியாற்ற முடியுமோ? என்ற கேள்வியை எனக்குள் எழுப்பியுள்ளது என முல்லைத்தீவில் தமிழர்களின் உரிமை சார்ந்த பல வழக்குகளில் முன்வந்து ஆஜராகும் சட்டத்தரணி வீ.எஸ்.எஸ்.தனஞ்சயன் தெரிவித்துள்ளார்.

தமிரழசுக் கட்சியில் இம்முறை இளம் வேட்பாளராகப் போட்டியிடுவார் என பலராலும் எதிர்பார்க்கப்பட்ட அவர் தனது சமூக வலைத்தளத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2024ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுமாறு பல்வேறு கட்சிகளாலும் சுயேட்சைக் குழுக்களாலும் எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அந்த அடிப்படையில், தமிழ் மக்களினுடைய பாரம்பரிய கட்சிகளில் ஒன்றான கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி என்ற அடிப்படையில், தமிழரசுக் கட்சியின் ஊடாக வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்குத் தீர்மானித்திருந்தேன்.

ஆயினும் நான், தமிழரசுக் கட்சியில் போட்டியிடுவது தொடர்பாக என்னுடைய நண்பர்களுடனும் நலன் விரும்பிகளுடனும் கலந்துரையாடியபோது, பலர் தற்போதைய சூழ்நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் போட்டியிட வேண்டாம் என ஆலோசனை வழங்கியிருந்தனர் என்பதுடன், நான் தமிழரசுக் கட்சியில் போட்டியிடுவதானது உண்மையான தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்தும் எனவும் குறிப்பிட்டிருந்தனர் என்றார்.

# கல் விழுந்ததில் சிறுவன் மரணம்

மாணவன் வசிக்கும் பகுதிக்கு அருகாமையில் குன்று உள்ளதுடன், சம்பவத்தின் போது வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்த போது மலை உச்சியிலிருந்து பாறை ஒன்று புரண்டுவந்து மாணவனின் தலையில் விழுந்ததில் பலத்த காயமடைந்த மாணவன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவதன்று மாணவியின் தந்தை மலையடிவாரத்தைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

# 1,145 உத்தியோகத்தர்கள் அதிரடியாக மாற்றம்

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் கையொப்பத்துடன் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பிரகாரம், பிரமுகர்களின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அங்கிருந்து நீக்கப்பட்டு வழக்கமான பொலிஸ் நிலையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்டத்தின் கீழ் உரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயரடுக்கு பாதுகாப்பு சேவையிலிருந்து நீக்கப்பட்டு சாதாரண காவல் நிலையங்களுக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகளில், தலைமை காவல் ஆய்வாளர்கள், காவல் ஆய்வாளர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், சார்ஜென்ட்கள், கான்ஸ்டபிள்கள் மற்றும் பெண் அதிகாரிகளும் உள்ளனர்.

உயரடுக்கு பாதுகாப்பு சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் வழக்கமான பொலிஸ் நிலையங்களுக்கு நியமிக்கப்பட்ட பின்னர் அந்த அதிகாரிகளுக்கு வழங்கப்படமாட்டாது என பதில் பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

# 200மில். டொலர்கள் வழங்க அனுமதி

அதற்கு அமைவான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (07) நடைபெற்றதோடு, இந்த ஒப்பந்தத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் இலங்கை அரசாங்கத்தின் நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தன மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டேவிட் சிஸ்லேன் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இந்த நிதி வசதியானது இலங்கையின் முன்னெடுக்கப்படும் விரிவான மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு உலக வங்கியின் தொடர்ச்சியான ஒத்துழைப்பைக் காண்பிக்கிறது.

இலங்கையின் மறுசீரமைப்பு, நிலைப்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை சுமுக நிலைக்குக் கொண்டு வருவதற்கான (RESET) அபிவிருத்தி கொள்கைகளுக்கு நிதியளிக்கும் (DPF) வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் இந்த நிதி உதவி இலங்கைக்குக் கிடைத்துள்ளது.

இந்த இரு வருட வேலைத் திட்டம் (2023-2024), வறுமை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீதான தாக்கத்தைக் குறைத்து முழுமையான பொருளாதார நிலைத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படுத்தப்படுகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்டம் 2023ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டதுடன், பிரதான மூன்று துறைகளின் கீழ் ஏழு வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்ட பின்னர், 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும்.

அதன்படி இந்த வேலைத் திட்டத்தின் பிரதான மூன்று அம்சங்களாக,

1.பொருளாதார நிருவாகத்தை மேம்படுத்தல்: நிதி நிலைத்தன்மையைப் பாதுகாத்து அரச வளங்கள் முகாமைத்துவம், நிதி ஒழுக்கம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை பலப்படுத்தல்

2. வளர்ச்சி மற்றும் போட்டித் தன்மையை மேம்படுத்தல் : மிகவும் போட்டித் தன்மை மிக்க தனியார்த் துறையுடன் இலங்கையின் அபிவிருத்தியை விரிவுபடுத்தல்

3.வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களைப் பாதுகாத்தல்: நெருக்கடி மற்றும் பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல்.

உரிய நிதி வசதியைப் பெற்றுக்கொள்ளத் தகுதி பெற வேண்டுமெனில், அரசாங்கத்தினால் மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் 9 வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட வேண்டிய அதேநேரம், அதற்கு உகந்த பொருளாதார கொள்கை வரைவொன்றைப் பேணிச் செல்ல வேண்டியதும் அவசியமாகும்.

அதன்படி இந்த நிதி வசதியின் இரண்டாம் கட்டத்தைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும், உலக வங்கிச் சபையின் அனுமதி கிட்டியுள்ளதோடு, ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அது அமுலாகும்.

உலக வங்கியின் இந்த நிதி உதவி இலங்கையின் பொருளாதாரத்தை நிலைப்படுத்தவும் எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நெருக்கடி மீண்டும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு தீர்மானமாக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்க உதவும் என்பதோடு, நிலையானதும் போட்டித் தன்மை மிக்கதுமான சூழலை உருவாக்கும் என்றும் நம்பப்படுகிறது.

# மட்டக்களப்பில் அமைதிப் பேரணி

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

பாலஸ்தீன-காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் ஆரம்பித்து, திங்கட்கிழமை (07) உடன் ஓராண்டு நிறைவடைகிறது. இந்நிலையில், பாலஸ்தீன மக்கள் மீதான தாக்குதலை நிறுத்தக் கோரி மட்டக்களப்பு நகரில், பெண்களினால் அமைதி பேரணியொன்று திங்கட்கிழமை (07) காலை முன்னெடுக்கப்பட்டது .

மட்டக்களப்பு லேடி மெனிங் ட்ரைவ் அந்தோனியார் தேவாலயத்திற்கு முன்பாக ஆரம்பமான குறித்த பேரணி மகாத்மா காந்தி பூங்காவை அடைந்தது.

சமூக செயற்பாட்டாளர்களான தட்சணாமூர்த்தி சாரதாதேவி, அனீஸா பிர்தௌஸ் உட்பட பலரும் இதில் கலந்துகொண்டனர்.



# “சந்தாவை நிறுத்து”

■ எஸ்.சதீஸ்

மலையக பெருந்தோட்ட பகுதியில் உள்ள சில தொழிற்சங்கங்களுக்கு இதுவரை காலமும் மாதாந்தம் செலுத்தப்பட்டு வந்த சந்தா பணத்தை நிறுத்துவதற்கான நடவடிக்கையினை மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

அதன் அடிப்படையில், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது நாளாந்த சம்பளத்தில் இருந்து அறவிடப்படும் தொகையை இடைநிறுத்துமாறு வலியுறுத்தி தோட்ட நிர்வாகங்களுக்கு எழுத்து மூலமான கடிதங்களை வழங்கியுள்ளனர்.

அதில், தோட்டத் தொழிலாளர்களாகிய நாங்கள், 70, 80 வருடங்களாக மலையகத்தில் உள்ள தொழிற்சங்கங்களுக்குச் சந்தா பணத்தைச் செலுத்தி வருகிறோம். இந்த 80வருட காலப்பகுதியில் எந்த ஒரு தொழிற்சங்கங்களும் சந்தா பணத்திற்குக் கணக்குகளை எங்களுக்கு சமர்ப்பித்தது இல்லை. அல்லது எங்களிடம் இருந்து சந்தா பணத்தைப் பெறும் தொழிற்சங்கங்கள் தமக்கான அபிவிருத்தி திட்டங்களைக் கூட முன்னெடுத்தது இல்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், இதுவரையிலும் நாங்கள் நம்பி வாக்களித்த மலையக தலைமைகள் மலையக மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி, ஏமாற்றி வந்தார்கள். தேர்தல் காலங்களில் ஒரு சாரார் லயன் முறையைக் கிராமங்களாக மாற்றப் போவதாக வாக்குறுதிகளை வழங்கினார்கள். மற்றொரு சாரார் பெருந்தோட்டத் தொழிலாளர்களைச் சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றப் போவதாகக் கூறினார்கள்.
ஆனால், இறுதியில் எதுவும் நடக்கவில்லை.



மேலும், நுவரெலியா மாவட்டத்தில் மலையகத்திற்கான பல்கலைக்கழகம் தொடர்பில் அறிக்கைகளும் அமைச்சர்களின் திடீர் கண்காணிப்பு மாத்திரமே இருந்தது. ஆனால், வருடங்கள் பல கடந்துள்ள போதிலும் மலையக பிள்ளைகளுக்கான பல்கலைக்கழகம் பொய்யான வாக்குறுதியாகவே போய்விட்டது. அவ்வாறு பொய் வாக்குறுதிகளை வழங்கும் தொழிற்சங்கங்களை நம்புவதற்கு நாங்கள் தயாரில்லை. பெருந்தோட்டத் தோட்ட தொழிலாளர்களின் 1,700 ரூபாய் சம்பள விவகாரத்தை,1,350 ரூபாய்க்கு மலையகத்தில் உள்ள தொழிற்சங்கங்கள் முற்றுப்புள்ளி வைத்துள்ளன. எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில் மலையக மக்களாகிய நாங்கள் யார் என்பதை மலையக பிரதிநிதிகளுக்கு நிரூபித்துக் காட்டுவோம் என்றும் அம்மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு...

■ ரஞ்சித் ராஜபக்ஷ

சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மார்பக புற்றுநோய் தடுப்பு மாதத்துடன் இணைந்து பெருந்தோட்டங்கள் மற்றும் கிராமப்புறங்களில் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைபயணமும் வீதி நாடகமும் லிந்துலை பிரதேசத்தில் திங்கட்கிழமை(07) இடம்பெற்றது.

லிந்துல சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர்.ரேஷ்மி மற்றும் அந்த அலுவலகத்தில் பணிபுரியும் சுகாதாரத் துறை ஊழியர்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.

பெருந்தோட்ட மற்றும் கிராமப்புறங்களில் வசிக்கும் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் தொடர்பில் முறையான பரிசோதனை செய்வதில்லை எனவும், அவ்வாறு பரிசோதனை செய்தால் மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து முறையான சிகிச்சையை மேற்கொண்டு அதனைத் தடுக்க முடியும் எனவும் சுகாதார அதிகாரி இங்கு தெரிவித்தார்.









# தந்தையின் கார்டை இழுத்த மகன் கைது

■ செ.தி.பெருமாள்

தந்தையின் பணப்பரிமாற்ற வங்கி அட்டையைப் பயன்படுத்தி 37,160 ரூபாயை மோசடி செய்த 35 வயதுடைய மகன் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம், நல்லத்தண்ணி பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

நல்லத்தண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள லக்சபான தோட்ட எமில்ட்டன் பிரிவைச் சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து தந்தை முனியாண்டி முருகன், செய்த முறைப்பாடு செய்ததையடுத்து, அவரது மகன் கைது செய்யப்பட்டார்.

மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவின் பணிப்பின் பேரில், சந்தேக நபரை ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிறுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கஜேந்திரகுமார் அணி வேட்பு மனுக்கள் தாக்கல்



யாழ். தேர்தல் மாவட்டத்திற்குரிய வேட்புமனுக்களை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் யாழ். மாவட்டச் செயலகத்தில் திங்கட்கிழமை (07) கையளித்தார்.

# பட்டம் விட்ட சிறுவர்களை தாக்கிய மின்சாரம்

பட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் மின்சாரம் தாக்கியதில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் ஹொரணையில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்றுள்ளது.

பமுனுமுல்ல அலவத்த பிரதேசத்தில் 13 வயதுடைய இரு சிறுவர்கள் பட்டம் விட்டுக் கொண்டிருந்த போது , பட்டம் அதி சக்தி வாய்ந்த மின்சார கம்பிகளில் சிக்கிக்கொண்டது.

இருவரும் ஒரு சிறுவனின் வீட்டின் மேல் மாடிக்கு சென்று, அதனை அலுமினியம் கம்பியால் மீட்க முயற்சித்த போது, பெரும் சத்தத்துடன் இவர்களை மின்சாரம் தாக்கியுள்ளது.

காயமடைந்த சிறுவர்கள் முதலில் ஹொரணை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



# ஜப்பானிய மொழி ஆசிரியர் கைது

ஜப்பானில் உயர் கல்வி மற்றும் தொழில் வாய்ப்பு தருவதாகக் கூறி, சுமார் ஒரு கோடி ரூபாவை மோசடி செய்து தலைமறைவாக இருந்த ஜப்பானிய மொழி ஆசிரியர் கைது செய்யப்பட்டதாக ஹொரணை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் பயன்படுத்திய சொகுசு காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபருக்கு எதிரான நான்கு முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய ஹொரணை நகருக்கு அருகில் உள்ள தங்கும் இடத்தில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஜப்பானில் வேலை மற்றும் உயர்கல்விக்கான ஒன்லைன் முறையில் ஜப்பானிய மொழியைக் கற்பிப்பதாகக் கூறி பெற்றோர்களை ஏமாற்றி தலா ஒவ்வொரு பெற்றோரிடமிருந்தும் மூன்று இலட்சம் ரூபாவிற்கு மேல் பல பணத்தைப் பெற்றுக்கொண்டமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டதன் பின்னர் தெஹியத்த கண்டிய புலத் சிங்கள, மத்துகம, தெபுவன, பெலியஅத்த, மொரவக்க, தங்காலை மற்றும் வெல்லவாய பொலிஸாருக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சாதனையாளரை சந்தித்தார் ஆளுநர்

■ எப்.முபாரக்

ஐக்கிய இராச்சியத்தை (UK) தலைமையகமாகக் கொண்ட *Worldide Book of Records* நிறுவனத்தினால் உலக சாதனையாளர்களை இனம் காண்பதற்கான போட்டியில், சாதனைபுரிந்த கிண்ணியா, குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த

4 வயதான நஸ்மி அக்யூலான் பிலால் என்ற மாணவனைக் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர சந்தித்து வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இச்சிறுவன், பத்தின் 100ஆம் அடுக்கு வரை அவற்றின் பெயர்களை ஆங்கிலத்தில் 2 நிமிடம் 12 செக்கன்களில் கூறி புதிய உலக சாதனையாளனாகத் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

குறித்த மாணவனின் பெற்றோர் கந்தளாய் வைத்தியசாலையில் பணிபுரியும் இயன் மருத்துவர் (Physiotherapist )நஸார் முஹமட் நஸ்மி



மற்றும் கிண்ணியா வைத்தியசாலையில் பணிபுரியும் இயன் மருத்துவர் (Physiotherapist) அஸ்ரப் பாத்திமா பஸீஹா ஆகியோர் என்பது குறிப்பிடத்தக்கது.

WCIC
Women's Chamber of Industry and Commerce
In Collaboration with
USAID
FROM THE AMERICAN PEOPLE
WCIC மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards
வழங்குநர் AIA INSURANCE

இலங்கையின் சாதனைமிக்க மகளிர் தொழில்முனைவோரை அழைக்கின்றோம்

இலங்கையின் மகளிர் தொழில்முனைவோருக்கு அழைப்பு!!
தொழில்முனைவோருக்கான ம.தொ.வ.ச பிரதிபாபிஷேக
மகளிர் தொழில்முனைவோர் விருதுகள் 2024

விண்ணப்ப வகைகள்: வணிக விருதுகள் - தொடக்க, மைக்ரோ, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய.
மாகாண விருதுகள் - ஒவ்வொரு மாகாணத்திலும் சிறந்தவை.

வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் டிஜிட்டல் தொழில்முனைவோர், புத்தாக்கமுள்ள தொழில்முனைவோர், சமூக தொழில்முனைவோர், சிறந்த ஸ்டார்ட் அப், மிகச் சிறந்த ஏற்றுமதி சார்ந்த தொழில்முனைவோர், மிகவும் நேர்மறையாகத் திறன் கொண்ட தொழில்முனைவோர் (உற்பத்தி மற்றும் சேவை), இளம் பெண் தொழில்முனைவோர் மற்றும் 2024 ஆம் ஆண்டின் மிக சிறந்த பெண் தொழில்முனைவோர் போன்ற சிறப்பு விருதுகளுக்கு பரிசீலிக்கத் தகுதியுடையவர்கள்.

என்ட்ரி கிட்டினை www.wcicsl.lk தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட என்ட்ரி கிட்டினை சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் நுழைவுக் கட்டணச் சான்றுடன் WCIC க்கு 2024 அக்டோபர் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும்.

அனுசரணையாளர்கள்
பிளட்டினம் AIA | டயமன்ட் DFCC Aloka (Banking Partner) | ஒத்துழைப்புப் பங்காளர் USAID | கோல்ட் McLARENS GROUP, SUNQUICK | சில்வர் Hayleys | ப்ரோன்ஸ் IMPRA
ஊடக பங்காளர்-அச்சு/சமூக ஊடகம்
The Sunday Times, DailyMirror, Daily FT, தமிழ்Mirror, Daily FT Online, DailyMirror Online, தமிழ்Mirror Online
அறிவுசார் பங்காளர் EY Building a better working world | தொடர்பாடல் பங்காளர் triad

மகளிர் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் இலங்கை
இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, இலங்கை, தொ.பே: 0112671762, மொபைல்: 0766848080

# விதியின் விளையாட்டல்ல; விழிப்பாகவும் இருக்க வேண்டும்

சில மரணங்களைப் பற்றிப் பேசத் தேவையில்லை. எனினும், பல மரணங்கள் பேச வைத்துவிடும். அதிலும், அகால மரணங்கள் என்றுமே நினைவில் நிற்கும். பாடசாலையில் கல்வி பயிலும் போது, இடம்பெறும் அகால மரணங்கள், ஒவ்வோர் ஆண்டும் நினைவை நெருட செய்துவிடும்.

நுவரெலியா வலயக் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் கொட்டகலை கேம்பிரிஜ் தமிழ்க் கல்லூரியில் 13ஆம் ஆண்டு தொழில்நுட்பக் கல்வி பயிலும், தலவாக்கலை கிரேட் வெஸ்டர்ன் தோட்டத்தில் வசிக்கும் 18 வயதுடைய சிவகுமார் நதீஷ் என்ற மாணவனின் அகால மரணமும், அந்த பாடசாலையைச் சேர்ந்தவர்களின் மனங்களில் மட்டுமட்டுல்ல, மாணவர் சமூகத்தின் மனங்களில் இருந்து என்றுமே அகலாது.

பாடசாலை இடைவேளையின் போது கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த போது பந்தைப் பிடிக்கச் சென்று பாடசாலை கட்டிடத்தின் சுவரில் வழுக்கி விழுந்து, தலையில் பலமாக அடி பட்டமையால், அந்த நதீஷ், வெள்ளிக்கிழமை (04) உயிரிழந்தார்.

13ஆம் ஆண்டு தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவன், கனவு மட்டுமன்றி, அந்த குடும்பத்தின் கனவை, உயிரே வந்த பந்து பறித்து விட்டது. நதீஷ், விளையாட்டில் மட்டுமன்றி, கல்வியிலும் கெட்டிக்காரன் என்பதை அவருடைய கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறு பறைசாற்றும்.

பாடசாலை இடைவேளை, அவரது குடும்பத்தை மட்டுமன்றி, பாடசாலை சமூகத்தையே, இடைவெளியாகிவிட்டது. அப்போது, பந்தை வீசிய மாணவன், அந்த பந்தை உயரே துடுப்பெடுத்தாடிய மாணவன், அவன் வைத்திருந்த துடுப்பாட்ட மட்டை, உயரே பறந்த பந்தை பிடியெடுக்குமாறு கத்திய மாணவர்களின் மனநிலை, நதீஷின் தலை மோதுண்ட கட்டிடத்தின் அந்த இடத்தை கடந்து செல்லும் போதெல்லாம் பல கதைகள் சொல்லப்படும்.

அந்த கல்லூரியில் ஒவ்வொரு நாளும் கிடைக்கும் பாடசாலை இடைவேளையின் போது, ஒவ்வொரு மாணவர்களின் மனங்களையும் நதீஷ், நெருட செய்துவிடுவான். நண்பர்கள், நண்பிகள், பாடசாலை நிர்வாகம் ஆகியவற்றில் இருந்து இலகுவில் அகல முடியாத வடுவுடன் சென்றுவிட்டான்.

பாடசாலை நேரத்தில், இவ்வாறான அகால மரணம் இடம்பெற்றது இது முதல் தடவையல்ல, இறுதி தடவையாகவும் இருக்க வாய்ப்புகள் குறைவு. எனினும், அவதானமாக இருந்தால், அதனையும் வெற்றிகொள்ள முடியும். நதீஷின் அகால மரணம் விதியின் விளையாட்டு எனக்கூறி அசட்டையாக இருந்துவிடாமல் விழிப்பாகவும் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு விளையாட்டுகளிலும் இருக்கும் ஆபத்தான விடயங்களை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். விளையாட்டுகளால், உலகளாவிய ரீதியில் பாடசாலை மட்டங்களில் கடந்த காலங்களில் ஏற்பட்ட பல கசப்பான சம்பவங்களை உதாரணமாக எடுத்துக் கொண்டு கற்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு அபாயகரமான சம்பவங்களுக்கும் பின்னரும் அதிரடியான தீர்மானங்கள் எடுக்கப்படும், அவை ஓரிண்டு வாரங்களுக்கு மட்டுமே அச்சொட்டாக அமலில் இருக்கும். பின்னர், “பழைய குருடி கதவை திறவடி” கதையாக மாறிவிடும். ஆகையால், விதியின் விளையாட்டல்ல, விழிப்பாக இருக்க வேண்டுமென ஒவ்வொரு இடைவேளையின் முன்பும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என நாமும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நெஞ்சத்தில் களங்கத்துடன் வாழ்பவர்கள், தங்களுக்கு ஏதாவது துன்பங்கள் வந்து விட்டால், தவறுகள் நேர்ந்து விட்டால், அதைத் தமக்குப் பிடிக்காதவர்களே காரணம் என வீண் பழியைச் சுமத்தி விடுகின்றார்கள்.

பழி சுமத்துவதால் எதுவும் நடப்பதில்லை. ஆனால், வலிந்து இத்தகையவர்கள் தமக்குத் தாங்களே ஊறுவிளைவிப்பவர்களாகி விடுகின்றார்கள்.

எவரது நிம்மதியைக் குலைப்பது பாவமாகும். ஒருவருக்கு இன்னொருவரிடம் முரண்பாடுகள் இருந்தால், அதைப் பேசி இணக்கப்பாட்டை ஏற்படுத்தலாம்.

தவறுகளை ஏற்றுக்கொள்ளாமல் அநேகர், வீண் பிடிவாதத்துடன் நீதிக்கு மாறாகவே வாழ்ந்து, தம்மைத்தாமே வருத்திக் கொள்கின்றார்கள்.

எந்தப் பிரச்சினை இருந்தாலும், அதைக் கண்டுகொள்ளாமல், பிறருக்கு உதவுபவனே முழுமனிதன். நல்ல காரியங்கள் செய்வதால், எந்த இடர்களும் எமக்குத் தெரியாமலேயே கழன்று விடுகின்றன.

நீங்கள் எதைச் சாதித்தீர்கள் என உங்களை நீங்களே கேட்பீர்களாக! தவறுகளை ஏற்றுக்கொண்டு திருந்துபவன் களிப்படைகின்றான்.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## முஸ்லிம் கட்சிகளுக்குள் நிலவும் இழுபறி நிலை

மொஹமட் பாதுஷா

பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான காலம் எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் முடிவுக்கு வரவுள்ளது. ஆனால், இதுவரை எந்தவொரு கட்சியும் தமது வேட்பாளர் பட்டியலை இறுதி செய்ததாக தெரியவில்லை.

ஏனென்றால், பெரும்பான்மைக் கட்சிகளுக்குள் மட்டுமன்றி, முஸ்லிம் மற்றும் தமிழ் கட்சிகளுக்குள்ளும் வேட்பாளராக யாரை நிறுத்துவது என்பதில் பாரிய இழுபறி ஏற்பட்டிருக்கின்றது.

பதவி ஆசை என்பது யாரையும் விட்டு வைக்கவில்லை. அதுவும் பிரதிநிதித்துவ அரசியல் என்பது இலங்கையில் மக்களுக்குச் சேவை செய்வதற்கான ஒரு கருவியாகப் பார்க்கப்படுவதை விட, அதிகாரத்திற்கான போதையாகவும் இலகுவான தொழிலாகவுமே மாறியிருக்கின்றது..

வழக்கமான சவாலை விட இந்த முறை தேர்தல் களம் ஒரு மாறுபட்ட சிக்கலை எதிர்கொண்டுள்ளது. அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் நாடு தழுவிய ரீதியில் மக்கள் ‘சில மாற்றங்களுக்காக’ கடினமான முடிவுகளையும் எடுப்பார்கள் என்ற விடயம் குறிப்புணர்த்தப்பட்டிருக்கின்றது.

இது குறிப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகள் பலருக்கு வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது. யார் யாரைத் தேர்தலில் களமிறக்குவது? யாரால் வெற்றி பெற முடியும்? தாம் எடுக்கும் முடிவின் பின் விளைவுகள் என்னவாக இருக்கும்? என்றெல்லாம் முஸ்லிம் கட்சிகள், அணிகள் தலையைப் போட்டுப் பிய்த்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடந்த உடனேயே பொதுத் தேர்தல் நடக்குமாயின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியே ஆட்சியமைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதுண்டு. இருப்பினும், இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு இது அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கமாட்டாது.

இயங்கு நிலை அல்லது பிரதிநிதித்துவ அரசியலுக்குப் புதுமுகங்களான வேட்பாளர்களைத் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் நிறுத்தி வெற்றிபெறச் செய்தாக வேண்டிய நிர்ப்பந்தத்தில் அக் கட்சி உள்ளது.

தேசிய மக்கள் சக்தி முஸ்லிம் அரசியல் அணிகளோடு சேர்ந்து போட்டியிடாத பட்சத்தில், இதே சிக்கலை எதிர்கொள்ளலாம். மறுபுறத்தில் பொதுஜனப் பெரமுண, ஐக்கிய தேசியக் கட்சி போன்ற பெரும்பான்மைக் கட்சிகளின் நிலைமை இதை விட மோசமாகும்.

முஸ்லிம் கட்சிகளைப் பொறுத்தமட்டில், ஏற்கெனவே எம்.பிக்களாக பதவி வகித்தவர்களில் பலர் மீண்டும் அப்பதவிக்காக போட்டியிட ஒற்றைக்காலில் நிற்கின்றனர். கால் நூற்றாண்டாக மக்களுக்குக் காத்திரமான எந்தச் சேவையையும் செய்யாமல் காலத்தைக் கடத்தி விட்டு மீண்டும் ஒரு வாய்ப்புக் கேட்டுப் பார்க்கலாம் என மனக் கணக்குப் போடுகின்றனர்.

நீண்டகாலமாக எம்.பியாக பதவி வகித்த முஸ்லிம்கள் மட்டுமன்றி, அண்மைக் காலத்தில் முஸ்லிம் கட்சிகளின் ஊடாக எம்.பியானவர்களுக்கு கூட அவர்களின் தோல்வி கண்முன்னே தெரிகின்றது. நிச்சயிக்கப்பட்ட வெற்றி வேட்பாளர்களை விட நிச்சயிக்கப்பட்ட தோல்வியின் நாயகர்கள்தான் பெரும்பாலும் களத்தில் உள்ளனர் எனலாம்.

இம்முறை முஸ்லிம் பிரதேசங்களில் பிரதான முஸ்லிம் கட்சிகள் மட்டுமன்றி இயங்கு நிலை அரசியலில் முடங்கிக் கிடக்கும். முஸ்லிம் அணிகளும் சுயேச்சை குழுக்களும் களமிறக்கப்படப் போகின்றன. முஸ்லிம் மக்கள் மத்தியில் ஏனைய பெரும்பான்மைக் கட்சிகளை விட என்.பி.பிக்கு ஏற்பட்டிருக்கின்ற அலையை எதிர்கொள்வது இன்னும் சிக்கலாக இருக்கும்.

ஆனால், வெற்றியோ தோல்வியோ தாமே மீண்டும் போட்டியிட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸின் முன்னாள் எம்.பிக்கள் கருதுகின்றனர். மாகாண சபை உறுப்பினர்களும் உரிமையும் அதனைக் கேட்கின்றனர். மக்கள் காங்கிரஸ் கட்சியிலும் இதே நிலைமை உள்ளது. ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ் கட்சிக்கும் இத்தேர்தல் மிகச் சவாலானதே. ஆனால், அதாவுல்லா இதனைப் பெரியதாக அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பு போன்ற ஏனைய சிறு கட்சிகள், அணிகள் பெரியதொரு போட்டியைக் கொடுக்கப் போவதில்லை. பிரதான முஸ்லிம் கட்சியான முஸ்லிம் காங்கிரஸில் இந்த முறையும் இடம் தர வேண்டும் என கூறுகின்றனர்.

முன்னாள் எம்.பிக்களான பலர் இருக்கின்றார். சிலர் தமக்கு வாய்ப்பளிக்காவிட்டாலும் தமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அல்லது தான் சிபாரிசு செய்பவருக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர்.

தலைவர் றவூப் ஹக்கீமே அம்பாறை மாவட்டத்தில் வந்து போட்டியிடப் போவதாகவும் கதைகள் உலா வருகின்றன. இது உண்மையென்றால் இது ஒரு தவறான முன்னுதாரணமாகும். ஒரு கட்சியின் தலைவர் தனது மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெறாமல், இன்னுமொரு மாவட்டத்திற்குச் சென்று ஆசனத்தை நிரப்புவதைத் தவித்துக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, மக்கள் காங்கிரஸின் முன்னாள் எம்.பிக்கள் தலைவர் றிசாட் பதியுதீனோடு இல்லை என்பதை நாடறியும். றிசாட் என்ற தனி நபரின் முயற்சிகள் தான் அக்கட்சியின் வளர்ச்சிக்குப் பிரதான காரணம் எனலாம்.

ஆயினும், அண்மைக் காலமாக றிசாட் எடுக்கும் முடிவுகள், அவர் கட்சியில் இணைத்துக் கொள்ளும் ஆட்கள் குறித்த பல விமர்சனங்கள் இருக்கின்றன.

என்.பி.பியில் போட்டியிடுவதற்குக் கூட முஸ்லிம் பிரதேசங்களில் பலத்த போட்டியுள்ளது. ஆயினும், ஒவ்வொரு நபரினதும் கடந்தகால வரலாறு, மக்கள் ஆதரவு, பின்னணி பற்றி ஆராய்ந்தே இறுதி முடிவு எடுக்கப்படும். அவர்களின் வெற்றியும் நிச்சயிக்கப்பட்டதல்ல.

முஸ்லிம் கட்சிகளின் அரசியலால் வடக்கு, கிழக்கின் முஸ்லிம் சமூகம் மனம் வெறுத்துப் போய் இருக்கின்றது என்பதென்னவோ உண்மைதான்.

ஆனாலும், பாராளுமன்ற தேர்தலைப் பொறுத்தமட்டில், தமது பிரதேசத்தில் போட்டியிடும் அரசியல்வாதிகளுள் சிறந்த ஒருவரையே மக்கள் ஆதரிப்பார்களே தவிர, எடுத்த எடுப்பில் நேரடியாக சிங்கள கட்சிகளுக்கு வாக்களிப்பார்கள் என்று கருத முடியாது.

அந்த வகையில், பிரதான இரு காங்கிரஸ்களிலும் வேட்பாளர் ஆசனம் கேட்டு பலர் ஆலாய்ப் பறக்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சிக்கு நிரந்தரமாகக் காணப்படுகின்ற வாக்கு வங்கியை வித்தியாசமான பிரசாரத்தின் ஊடாக கைப்பற்றலாம் என்று பலர் எண்ணுகின்றார்கள். பழைய மு.கா. எம்.பிக்கள் செய்யாததை தாம் செய்து காட்டுவோம் என்று கூறுகின்றார்கள்.

மக்கள் காங்கிரஸில் போட்டியிடுவதற்கு ஒப்பீட்டளவில் இலகுவாக வாய்ப்புக் கிடைக்கலாம் என்பதாலும் தேர்தல் செலவுகளை றிசாட்டும் கொஞ்சம் ஈடு செய்வார் என்பதாலும், தலைவர் றிசாட்டுக்கு இருக்கின்ற மக்கள் ஆதரரவப் பயன்படுத்தியும் மக்களுக்கு வெகுமதிகளை வழங்கியும் வெற்றி பெறலாம் என்றும் கனவு வேட்பாளர்கள் பலர் கருதுகின்றனர்.

எனவே, பெரும்பான்மைக் கட்சி ஒன்றுடன் இணைந்து போட்டியிட்டால் குறைந்தளவான வேட்பாளர்களை முஸ்லிம் கட்சிகள் சார்பில் நிறுத்த முடியும். எனவே, வேட்பாளர் பட்டியலில் இடமில்லை என கூறி, சிக்கலான சிலரை ஒதுக்கிவிடுவதா? அல்லது, தனியே போட்டியிடுவதன் ஊடாக எல்லாருக்கும் வாய்ப்பளிப்பதா, என்று தான் ஹக்கீமும் றிசாட்டும் அதிகமாகச் சிந்திப்பதாகத் தெரிகின்றது.

ஏனென்றால், முஸ்லிம் காங்கிரஸிலும் மக்கள் காங்கிரஸிலும் ஆசனம் கேட்டு அலைகின்ற பலர் எதிர்காலத்தில் எப்படிச் செயற்படுவார்கள் என்பது தொடர்பில் அக்கட்சித் தலைவர்களுக்கு உள்ளுக்குள் ஒரு அச்சம் இருக்கின்றது.

தமது மூக்கணாங்கயிற்றுக்குக் கட்டுப்படுவார்களா என்றும் இவர்களால் கட்சி இன்னும் நாசமாகிவிடுமா என்றும் எண்ணலாம்.

பழைய முகங்களை மீண்டும் போட்டியிட வைத்து விசப் பரீட்சை ஒன்றை நடத்தவும் முடியாது. அதற்காக புதியவர்களை முற்றுமுழுதாக நம்பி பழையவர்களைக் கழற்றி விடவும் முடியாது என்ற திரிசங்கு நிலை ஏற்பட்டுள்ளதால், 13ஆம் திகதி நள்ளிரவு வரைக்கும் இறுதி முடிவுகள் எடுக்கப்படாது என்றே கருத முடிகின்றது.

மக்களுக்கு எதுவுமே செய்யாதிருந்த முஸ்லிம் எம்.பிக்கள், அல்லது பெரிய வீராப்பு பேசி அதன்மூலம் புதிதாக எம்.பியாக தெரிவு செய்யப்பட்ட உடனேயே குத்துக்கரணம் அடித்த அரசியல்வாதிகள் போன்ற வகையறாக்களை முஸ்லிம் சமூக அரசியல் வேண்டி நிற்கவில்லை.

உண்மையாகச் சொல்லப் போனால், ‘இவர்தான் அடுத்த முஸ்லிம் தலைவராக, எங்களது மாவட்டத்தின் எம்.பியாக வர வேண்டும்’ என்று மக்கள் நினைக்கும் அளவுக்கு எந்த ஒரு நபரையும் தற்போதைய முஸ்லிம் களத்தில் காணக் கிடைக்கவில்லை.

எல்லோரும் கள்வர்கள் என்ற எண்ணம்தான் இன்றும் மக்களிடையே இருக்கின்றது.

எனவே, இது குறித்து கட்சித் தலைவர்கள் சிந்திக்க வேண்டும். மூடிய அறைகளுக்குள் தூக்கக் கலக்கத்தில் இரவிரவாக கலந்துரையாடி பயன் இல்லை. நேரடியாக மக்களிடம் பேச வேண்டும். சிறந்தவர்களுக்கு மட்டும் வாய்ப்பளிக்க வேண்டும். சமகாலத்தில் முஸ்லிம் மக்களும் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

எந்தக் கட்சியில் போட்டியிட்டாலும் அவர் ஒரு பொருத்தமான மக்கள் பிரதிநிதியாக இருக்க வேண்டும்.

சமூகத்திற்கான அரசியலைச் செய்யத் திராணி உள்ளவராக இருக்க வேண்டுமே தவிர, எமது ஊருக்கு எம்.பி. வேண்டும் என்றோ, அவர் அரிசிப் பொதிகளையும். ஐயாயிரம் ரூபாய் தாள்களையும் தருவார் என்று எண்ணிச் செயற்பட முடியாது.

ஜனாதிபதி பதவியில் மாற்றம் ஏற்பட்டால் மட்டும் போதாது. முஸ்லிம் அரசியலும் மாற வேண்டும் வேண்டும்.

எனவே, சமூகம் சார்ந்த நோக்கத்தில் அன்றி, வேறு எந்த மறைமுக காரணங்களுக்காகவும் முஸ்லிம் தலைவர்கள் தமது கட்சிகளில் எந்த ஒரு நபருக்கும் வேட்பாளராக இடமளிக்கக் கூடாது.

## கடிதங்கள்

### பெயர்ப் பலகை வேண்டும்

தலவாக்கலை பஸ் நிலையத்திலிருந்து டயகம நுவரெலியா, நானுஓயா, மெராயா, லிந்துலை, அக்கரப்பத்தனை, வட்டகொடை உள்ளிட்ட பிரதேசங்களில் உள்ள பொதுமக்கள் இந்நகரத்திற்கு வருகை தந்து ஏனைய மாவட்டங்களுக்குச் செல்கின்றனர்.

இந்தநிலையில், தலவாக்கலை பஸ் நிலையத்தில் பெயர்ப் பலகை இல்லாத குறையினை நிவர்த்தி செய்து வைப்பதற்கு நகர சபை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்பு பஸ் நிலையம் புதிதாகத் திறக்கப்பட்ட போதும் பெயர்ப் பலகை இங்கு காணப்பட்டது.

அண்மைக் காலமாக இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பெயர்ப் பலகை எவ்வித எழுத்துக்களும். இல்லாமல் வெறும் பலகையாக மாத்திரமே காணப்படுகிறது.

எனவே, உடனடியாக பெயர்ப் பலகை ஒன்றினை காட்சிப்படுத்த வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

- அக்கரப்பத்தனை நிருபர்






# உணர்வுகளின் சங்கமமாய் A SEPARATION



பெரியசாமி சுசாந்தனி,
யாழ்.பல்கலைக்கழகம்,
ஊடககற்கைகள் துறை.




**திரைப்படத்துக்கு மொழிகள் தேவையில்லை. உணர்வுகள் அதன் மொழியாகி விடும். மௌனம் கூட ஆயிரம் ஆயிரம் அர்த்த கதைகள் கூறும் அவ்வாறுதான் நான் ரசித்த ஒரு படம் ஈரானிய திரைப்படமான A separation. கணவன் மனைவி வாழ்க்கை போராட்டம் இரண்டு மணித்தியாலங்களில் பின்னணி இசை எதுவும் இன்றி உணர்வுகள் ததும்ப படமாக்கப்பட்டுள்ளது.**

யதார்த்த பூர்வமாகப் படைக்கப்பட்ட இப்படமானது பல சிறப்பம்சங்களுடன் பேசும் படமாக 2011 ஆம் ஆண்டு படைக்கப்பட்டது.

யதார்த்தமான வாழ்வியலைப் பேசும் இப்படம் ஆனது உலகின் பல நாடுகளிலும் ஒரு முக்கியமான பேசு பொருளாகிய திரைப்படமாகவே திகழ்கின்றது. ஈரானிய படமான இப்படம் இயக்குநர் அஸ்கர் பர்ஹாடி என்பவரால் படைக்கப்பட்ட காவியம் ஆகும்.

சராசரி நடுத்தர குடும்பத்தில் நடக்கும் இயல்பான பிரச்சனைகள், கணவன் மனைவி பிரிவு வரை எவ்வாறு செல்கின்றது என்பதை இத்திரைப்படத்தின் ஒரு சுருக்கமான கதையாகக் காணப்படுகின்றது.

திருமணமான தம்பதியின் சிக்கலான ஒரு நிலையையே இத்திரைப்படம் வெளிப்படுத்துகின்றது. திருமணம் முடிந்ததும் கணவன் மனைவி என ஒவ்வொருவருக்கும் இருக்கும் கடமைகள் நிறைவேற்ற வேண்டிய தேவைப்பாடுகள் என அனைத்தும் சிந்தனையின் பால் சிக்கலான நிலையை ஏற்படுத்துகின்றது.

இங்கு குழந்தையின் படிப்பைக் கருதி வெளியில் செல்ல நினைக்கும் மனைவி தனது உடல்நலம் சரியில்லாத தனது தந்தையைப் பார்த்துக்கொள்ள அந்நாட்டிலேயே இருக்க நினைக்கும் கணவன் மனைவி என இருவருக்கும் இடையில் வாக்குவாதம்... சிமெண்ட் தனது மகள் தர்மைக்கு சிறந்த கல்வி வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்தில் தனது கணவன் நாடார் உடன் வாக்குவாதத்தில் ஈடுபடுகிறார்.

இவ்வாறு ஆரம்பிக்கும் கதையானது எவ்வாறு நீதிமன்ற நாடகமாக மாறுகிறது எவ்வாறான பிரச்சனைகளை திரைக்கதை நகர்த்திச் செல்லப்படுகிறது என்பதை யு ளநியசயவழைn எனும் ஈரானிய காவியத்தின் கதைச்சுருக்கமாகும்.

இத்திரைப்படத்தைப் பொறுத்தவரையில், உணர்வுகளின் சங்கமமாய் நகர்ந்து செல்கின்றது.

ஒவ்வொரு கதாபாத்திரத்தினதும் நடிப்பு யதார்த்தமாய் படைக்கப்பட்டு திரைப்படத்தின் கதை நகர்விற்கு மேலும் வலு சேர்த்தது என்று கூறலாம். இயக்குநர் அஸ்கர் பர்ஹாதி வழமையான திறை நுணுக்கத்தைப் போலவே, இத்திரைப்படமும் மெதுவான ஓட்டத்தோடு ஆரம்பித்து, பின்பு கதைப் பின்னல் சிக்கலான உச்ச கட்டத்தை அடைய வேகமான நகர்வினை காட்டுகின்றது. 2 மணித்தியால திரைப்படத்தில் ஒவ்வொரு நிமிடத்திலேயே ஆர்வமானதாகக் காட்டிய போக்கு ஒளிப்பதிவாளரின் திறன் என்றே கூற முடியும்.

A separation திரைப்படத்தைப் பொறுத்தவரையில் வேற்றுமொழி படம் என ஒரு நேரப் போக்கிற்காகப் பார்க்க ஆரம்பித்தாலும் கூட, இரண்டு மணித்தியாலத்தை நிறைவில் மனதிற்கு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திச் சென்ற திரைப்படமாகவே திரைப்படம் காணப்படுகின்றது.

இத்திரைப்படத்தின் நடிகர் தெருவினை பற்றிப் பேச வேண்டிய கடப்பாடும் என்னிடம் காணப்படத்தான் செய்கின்றது. ஒவ்வொரு நடிகரும் திரைக்கதைக்கு ஏற்ற வாராகத் தேர்வு செய்தது திரைப்படம் பேசும் பொருளாகியதற்கு மற்றும் ஒரு காரணம் என்றே கூறலாம்.

கதையின் கதாநாயகனாக நடித்த Payamn maadi (Nadar) ஆக இருக்கலாம்.

கதாநாயகியாக நடித்த Sarina farhadi (Termah) வாக இருக்கலாம். கதாநாயகனின் நடித்த Ali Asgar shahbazi என முக்கியமான கதாபாத்திரங்கள் தொடக்கம் துணை கதாபாத்திரங்கள் என அனைவரும் தங்களுடைய அற்புதமான நடிப்புத் தன்மையை வெளிப்படுத்தியமை திரைப்படத்தின் வெற்றிக்கு வழிசமைத்தது எனலாம். திரைப்படத்தின் முக்கிய கதாபாத்திரங்கள் 6 மற்றும் துணை கதாபாத்திரங்கள் 15 என அனைவரும் இணைந்த அற்புதமான படைப்பாக வெளிக்கொணர்ந்து அதற்கான அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொண்டனர்.


இத்திரைப்படத்தின் திரைக்கதை, ஒலிப்பதிவு, திரைச்சுவடி, நடிகர்கள் என பல்வேறு துறைகளிலும் நுணுக்கமான விடயங்களைக் கருத்தில் கொண்டு செயல்பட்டதன் விளைவு இத்திரைப்படம் பல விருதுகளை தம் வசமாக்க துணைக் கோளியது.

அந்த வகையில், செப்ரேஷன் எனும் இத்திரைப்படமானது ஈரானிய நாட்டின் முதலாவது ஆஸ்கார் விருதினை பெற்ற திரைப்படமாகவும் பேசப்படுகின்றது.

அதுமட்டுமல்லாது சர்வதேச திரைப்பட விழாவில் அகாடமி விருதினை வென்றது மற்றும் ஈரானிய திரைப்பட விழாவில் சிறந்த இயக்குநருக்கான விருதினையும் பெற்றது சிறந்த முழு நீள திரைப்படத்திற்கான சர்வதேச விருது என 53 க்கும் மேற்பட்ட நாடுகளில் விருதுகளைப் பெற்ற ஒரு சிறந்த திரைப்படமாக இத்திரைப்படம் போற்றப்படுகின்றது.

எதார்த்த பூர்வமாக சாதாரண குடும்பத்தின் வாழ்வியலை வைத்து உருவாக்கப்பட்ட திரைப்படமானது திறந்த முடிவினை வழங்கி பார்வையாளர்களின் சிந்தனைக்கு முடிவினை விட்டு விட்டது.

நான் ரசித்த திரைப்படங்களில் ஒரு சிறந்த திரைப்படமாகவும் உணர்வுகள் கலாச்சாரம் என அனைத்தும் வெளிப்படும் சுவாரஸ்யமான ஒரு திரைப்படமாகவும் இத்திரைப்படம் விளங்குகின்றது உணர்வுகளின் சங்கமமாய் A separation.





# வானத்தின் பாலம்



இளங்கோவன் நிரோஷிகா,
ஊடக கற்கைகள் துறை மாணவி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**இயற்கை அன்னை எமக்கு பல அதிசயங்களை அளித்துள்ளாள். அதில் ஏராளமானவை எம் நாட்டின் சிறப்பை இவ்வுலகில் நிலைநாட்டுகிறது. இதனாலேயே சுற்றுலாப் பயணிகள் அதிகளவு விரும்பி சுற்றுலா செல்லும் நாடாக நம் இலங்கை திகழ்கிறது.**

அந்த வகையில், மலை நாட்டின் அழகை மேலும் மெருகூட்டும் விதமாக அமைந்திருக்கும் வில் போன்ற ஒன்பது வளைவுகள் கொண்ட பாலம் ஒன்பது அரைவட்ட பாலம் NINE ARCu; BRIDGE (நைன் ஆர்ச் பிரிஜ்) ஆனது மக்களின் மத்தியில் அதிக அளவு பிரபல்யம் அடைந்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் தெமோதரை என்ற பிரதேசத்தில் அமைந்திருக்கும் இந்த ஒன்பது அரைவட்ட பாலமானது தெமோதரை புகையிரத நிலையத்திற்கும் எல்ல புகையிரத நிலையத்திற்கும் இடையில் அமைந்துள்ளது.

பாலம் என்பது பள்ளத்தாக்கின் மீதும் ஆற்றுக்கு மேலாகவும் கட்டப்படுவதாகம் இது உறுதியாகவும் நிலைத்து நிற்கக்கூடியதாகவும் காணப்பட வேண்டும் இல்லாவிடில் பல அசோகரியங்களை எதிர்கொள்ள நேரிடும்.

அந்த வகையில், சிறந்த அளவு திட்டத்தினையும் பிரபல்யமான பொறியியலாளர்களையும் கொண்டு உறுதியாக நிர்மாணிக்கப்பட்டதாக இந்த ஒன்பது அரைவட்ட பாலம் காணப்படுகிறது.

பிரித்தானியப் பேரரசு இலங்கை ஆட்சி செய்தமைக்கான சுவடுகள் ஏராளம் இலங்கையில் பதிந்துள்ளன. அவ்வாறு இலங்கையில் பிரித்தானியக் கட்டுமானங்களின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக இந்த ஒன்பது அரைவட்ட பாலம் காணப்படுகிறது.

ஒன்பது அரை வட்டங்களைக் தன்னகத்தே கொண்டு அமைந்துள்ள இப்பாலத்தினை வானத்தின் பாலம் எனவும் கூறுகின்றனர்.

இலங்கையரான பி.கே.அப்புகாமியும் இணைந்து இதனைக் கட்டியுள்ளார்.

இத்திட்டத்தைப் பிரதான பொறியியலாளராக டீ.ஜேவிமலசுந்தர என்பவரும் வடிவமைப்பாளராக ஹரல்ட் குட்பேர்ட் மார்வூட் என்பவரும் காணப்பட்டனர். இப்பாலமானது 1921ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கடல் மட்டத்திலிருந்து 3,100 மீட்டர் உயரத்தில் இப்பாலமானது கட்டப்பட்டுள்ளது.

25 அடி அகலமும் 80 அடி உயரமும் 300 அடி நீளமும் கொண்டதாகக் குறித்த பாலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.


இப்பாலத்துக்கான கட்டிட வேலை நடைபெறும் போது, முதலாம் உலகப்போர் நடைபெற்ற காரணத்தினால் ஒன்பது அரைவட்ட பாலத்தை நிர்மாணிப்பதற்கென ஒதுக்கப்பட்ட இரும்புகள் பிரித்தானியாவின் சண்டை முனைத் தேவைக்காக ஒதுக்கப்பட்டது என்ற ஒரு கருத்து நிலவி வருகிறது.

இதன் காரணமாக இரும்பு பெற முடியாத நிலை காணப்பட்டதால், இரும்பு இல்லாவிட்டாலும் கல், செங்கல், சீமெந்து ஆகியவற்றைக் கொண்டு மிகவும் நேர்த்தியாக இக்கட்டடமானது கட்டி முடிக்கப்பட்டது.

இதனை நிரூபிக்கும் விதமாக இன்றும் 100 வருடங்களைத் தாண்டி இந்த பாலமானது நிலைத்து நிற்கின்றது.

இவ்வாறு கட்டப்பட்டு இன்றும் நிலைத்திருக்கும் ஒன்பது அரைவட்ட பாலமானது உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மட்டுமின்றி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்துள்ளது.

> **“ இலங்கையில் பிரித்தானியக் கட்டுமானங்களின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக இந்த ஒன்பது அரைவட்ட பாலம் காணப்படுகிறது. ஒன்பது அரை வட்டங்களைக் தன்னகத்தே கொண்டு அமைந்துள்ள இப்பாலத்தினை வானத்தின் பாலம் எனவும் கூறுகின்றனர்**



காரணம் இப்பாலமானது அருகே அமைந்திருக்கும் மலை குன்றுகளை இணைக்கும் விதமாக காணப்படுகிறது. மேலும் பச்சை பசேல் என பச்சை கம்பளம் விரித்தால் போல் காணப்படும் தேயிலை செடிகள் நிறைந்த மலைகளிடையே அமைந்திருக்கும் இந்த அரைவட்ட பாலத்தின் மீது புகையிரதம் செல்லும் போது கண்களுக்கு குளிர்ச்சியான காட்சிகளை கண்டு ரசிப்பதோடு மனதை தொடும் ரம்யமான காற்றின் ஓசை இணையும் கேட்டுக் கொண்டே பயணிக்கலாம்.

சிலு சிலுவென்று காற்று உடம்பில் தொட்டுச்செல்கையில் மனதோடு உடம்பும் சிலிர்த்துப் போகின்றது.

புகையிரதத்தில் சென்று பார்வையிடத்துக்கு மட்டுமன்றி பலர் அப்பாலத்திக்கு சென்று பாலத்தில் புகையிரதபாதையில் நடப்பது, அந்தப் பாலத்தில் இருந்து புகைப்படம் எடுப்பது, புகையிரதம் பாலத்திலே கடந்து செல்லும்போது அதன் அழகை பார்த்து ரசிப்பது மேலும் அப்பாலத்தின் கீழே சென்று பார்வையிடுவது தங்கள் பெயரினை அப்பாலத்தின் கட்டிடத்தில் எழுதுவது போன்ற பல்வேறு அனுபவத்தினை இந்த ஒன்பது அரைவட்ட பாலம் சுற்றுலாப்பயணிகளுக்கு அளிக்கிறது.

இவ்வாறு மனதிற்கு ரம்யமான ஒரு அனுபவத்தினை எமக்குத் தரும் இந்த ஒன்பது அரைவட்ட பாலத்தினை அனைவரும் சென்று பார்க்க வேண்டும் என்பதற்காக இலங்கை புகையிரத நிலையங்களிலும் விளம்பரப் பலகைகளிலும் அதன் புகைப்படங்களை காட்சிப்படுத்தியுள்ளனர். பிரித்தானிய அரசாங்கத்தினால் இது கட்டப்பட்டாலும் இதில் இலங்கையின் பணியே அளப்பரியது. பிரதானிய பொறியியலாளர்களுடன்

இதனால் இந்த பாலத்தினை பார்வையிடுவதற்காக அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தரும் ஒரு இடமாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இப்பாலத்தின் அருகே காணப்படும் மரங்களிலும் பாலத்தின் கட்டடத்தின் கீழே காணப்பட்ட குளவி கூடுகள் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு அச்சுறுத்தல் காணப்பட்டதனால் அதனை பாதுகாப்பாக அகற்றி சுற்றுலாப் பயணிகளுக்கு எவ்வித பிரச்சனையும் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பான முறையில் இத்தளத்தினை பார்வையிடுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு கூடுகளை பாதுகாப்பா அகற்றும் மற்றும் இடைக்கால தீர்வாகவும் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணியை கண்டி பிங்கு நண்பர்கள் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இச் செயற்பாட்டில் மத்திய கலாச்சார நிலையத்தின் மொனராகலை மாவட்ட வேலை திட்டத்தின் கீழ் செயற்படும் தொல்பொருளியல் மற்றும் புகையிறத திணைக்களம் என்பவற்றின் மேற்பார்வையின் கீழ் எல்ல பிரதேச செயலகம் மற்றும் போலீஸ் என்பன பங்களிப்பை அளித்தது. நூறு வருடங்களை பூர்த்தி செய்த இவ் ஒன்பது அரைவட்ட பாலம் ஆனது தேசிய உரிமையாக பிரகடனப்படுத்தப்பட்டு நினைவு முத்திரை ஒன்றை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அழகையும் அமைதியும் கொண்ட இந்த ஒன்பது அரைவட்ட பாலத்தின் மீது புகையிரதம் செல்லும் போது புகையிரதத்தில் அமர்ந்திருக்கும் எமக்கு தாய் மடியில் தலை வைத்து தாலாட்டு கேட்பது போன்ற ஒரு உணர்வை தருகிறது என புகையிரதம் ஊடாக இப் பாலத்தில் பயணிப்பவர்கள் கூறுகின்றனர்.

# அதிகார மாற்றத்தை அமைதியாக அனுமதித்தார்





ச.அபிசரண்,
மூன்றாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

ரணில் விக்ரமசிங்க 24 மார்ச் 1949இல் கொழும்பில் பிறந்தவர். அரசியல் குடும்பத்தில் பிறந்த விக்ரமசிங்க இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று, 1972இல் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்தரணியாகத் தகுதி பெற்றார். எஸ்மண்ட் விக்ரமசிங்க மற்றும் நளினி விக்ரமசிங்க நீ விஜேவர்தன ஆகியோரின் இரண்டாவது மகனாவார். அவரது தந்தை ஒரு வழக்கறிஞராக இருந்தார், அவர் லேக் ஹவுஸ் குழுமத்தின் செய்தித் தாள்களைக் கைப்பற்றும் பத்திரிகை முதலாளியாக மாறினார். இவரது தாத்தாக்கள் இலங்கை சிவில் சேவையின் சிறில் விக்ரமசிங்க மற்றும் பத்திரிக்கையாளர் டி.ஆர்.விஜேவர்தன.

விக்ரமசிங்க, றோயல் ஆயத்தப் பள்ளியிலும், கொழும்பு ரோயல் கல்லூரியிலும் கல்வி கற்றார். அங்கு அவர் அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் மகனான அனுர பண்டாரநாயக்கவின் சக தோழனாகவும் நண்பராகவும் இருந்தார். அத்துடன், சோசலிச தலைவர் பிலிப் குணவர்தனவின் மகன் தினேஷ் குணவர்தனவின் நண்பராவார்.

விக்ரமசிங்க இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் அதன் கொழும்பு வளாகத்தில் நுழைந்தார். அது இப்போது கொழும்பு பல்கலைக்கழகமாக உள்ளது. பட்டம் பெற்ற பிறகு, அவர் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டப் பரீட்சைகளை முடித்தார். 1972இல் HW ஜெயவர்த்தன. QC இன் கீழ் பயிற்சி பெற்ற பின்னர் வழக்கறிஞராகப் பதவியேற்றார். 1973இல் சட்டத் தொழிலில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து, அவர் சட்டத்தரணியானார். பொருளாதாரம், கல்வி மற்றும் மனித உரிமைகளில் சீர்திருத்தங்களில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பிற்காக விக்ரமசிங்க, 14 பெப்ரவரி 2017 அன்று ஆஸ்திரேலியாவில் உள்ள டீக்கின் பல்கலைக்கழகத்தில் இருந்து, கௌரவ டாக்டர் பட்டத்தைப் பெற்றார். 1970களின் நடுப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து, அரசியலில் பிரவேசித்து 1977இல் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார் . பல ஆண்டுகளாக, அவர் வெளியுறவு, இளைஞர் விவகாரம் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு அமைச்சர் பதவிகளை வகித்தார். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் படுகொலையைத் தொடர்ந்து, 1993இல் அவர் முதலில் பிரதமரானார். இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியாக 2022 முதல் 2024 வரை பணியாற்றினார். முன்னதாக, அவர் 1993 முதல் இலங்கையின் பிரதமராக பணியாற்றினார்.

1994, 2001-2004, 2015-2019 மற்றும் 2022இல் அவர் நிதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், தொழில்நுட்ப அமைச்சர் மற்றும் பெண்கள், குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சர் உட்பட பல அமைச்சர் பதவிகளை வகித்தார். விக்ரமசிங்க 1994ஆம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு (UNP) தலைமை தாங்கி ஆறு தடவைகள் இலங்கையின் பிரதமராக இருந்துள்ளார்.

விக்ரமசிங்க 1999ஆம் ஆண்டு மற்றும் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தோல்வியுற்றார். 2015இல், அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பிரதமராக நியமிக்கப்பட்டார். 2019ஆம் ஆண்டு வரை கூட்டணி அரசாங்கத்தை வழிநடத்தினார். அவரது பதவிக்காலத்தில், அவர் 2018இல் அரசியலமைப்பு நெருக்கடியை எதிர்கொண்டார், ஆனால், அது தீர்க்கப்பட்ட பின்னர் மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டார். அவர் 2020இல் தனது பாராளுமன்ற ஆசனத்தை இழந்தார். ஆனால், 2021இல் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் பாராளுமன்றத்தில் நுழைந்தார்.

மே 2022இல், அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் விக்ரமசிங்க மீண்டும் பிரதமராக நியமிக்கப்பட்டார். ஜூலை 2022இல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, விக்ரமசிங்க தற்காலிக ஜனாதிபதியானார். பின்னர் 20 ஜூலை 2022 அன்று பாராளுமன்றத்தால் இலங்கையின் 9ஆவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த நாள் அலுவலகம். அவர் 2024ஆம் ஆண்டு தனது சொந்த பதவிக்குப் போட்டியிட முயன்றார், ஆனால், மீண்டும் தேர்தலில் வெற்றி பெற முடியவில்லை, 17.27% வாக்குகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.



> சுயேச்சை வேட்பாளராக மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாக விக்ரமசிங்க அறிவித்தார். அவர் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்த ஒரு பிரிவினரால் அங்கீகரிக்கப்பட்டார். அவர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் மகாஜன எக்சத் பெரமுனாவாலும் அங்கீகரிக்கப்பட்டார். இது விக்ரமசிங்கவின் ஜனாதிபதி பதவிக்கான மூன்றாவது முயற்சியாகும். அத்துடன் அவர், UNPயின் வேட்பாளராகப் போட்டியிடாதது முதல் முறையாகும்

## ஜனாதிபதி பதவி (2022–2024)

ஜூலை 13 அன்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு மாலத்தீவுக்குத் தப்பிச் சென்றார் , விக்ரமசிங்கே தனது பிரதமர் பதவியின் காரணமாக ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். மற்றும் இலங்கையில் அவசரகால நிலையை விதித்தார். ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இராஜினாமாவைத் தொடர்ந்து, விக்ரமசிங்கே ஜூலை 15 அன்று தலைமை நீதிபதி ஜெயந்த ஜெயசூர்யா முன் இலங்கையின் செயல் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். முன்னர் தேசியப் பட்டியல் எம்.பியாக இருந்த விக்ரமசிங்க, தனது கட்சியை நாடாளுமன்றத்தில் ஒரே ஒரு ஆசனத்தில் மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தி, ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், தொழில்நுட்ப அமைச்சர் மற்றும் நிதியமைச்சர் ஆகிய பதவிகளை வகித்தார். அதே நேரம். விக்ரமசிங்க, தற்காலிக ஜனாதிபதியாகப் பதவியேற்றதும், ஜனாதிபதியின் கௌரவமான முன்னொட்டாக 'ஹிஸ் எக்ஸலென்சி' என்பதைத் தடை செய்ததுடன், ஜனாதிபதிக் கொடியைப்பயன்படுத்துவதை உத்தியோகப்பூர்வமாக ஒழித்தார்.

2024 நவம்பரில் முடிவடையவிருந்த ராஜபக்ஷவின் எஞ்சிய பதவிக் காலத்திற்குச் சேவை செய்ய இரகசிய வாக்கெடுப்பின் மூலம் இலங்கையின் 9வது ஜனாதிபதியாக ஜூலை 20 அன்று, அவர் இலங்கை பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தனது முக்கிய போட்டியாளரான டலஸ் அழகப்பெருமாவை தோற்கடித்தார். 134 வாக்குகளுடன் ஜூலை 21 அன்று, அவர் இலங்கையின் ஒன்பதாவது (எட்டாவது) ஜனாதிபதியாகப் பாராளுமன்ற வளாகத்தில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவியேற்றார். ஒரு நாள் கழித்து, அவர் தினேஷ் குணவர்தனவை பிரதமராக நியமித்தார்.

அவர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட உடனேயே, விக்ரமசிங்க 2022ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களை முறியடிப்பதாகச் சபதம் செய்தார் . ஆர்ப்பாட்டக்காரர்களை 'பாசிஸ்டுகள்' என்று விக்ரமசிங்க கண்டித்தார். விக்ரமசிங்க பதவியேற்ற ஒரு நாளுக்குப் பிறகு ஜூலை 22ஆம் திகதி அதிகாலை காலி முகத்திடலில் உள்ள போராட்டத் தளத்தைப் பாதுகாப்புப் படையினர் சோதனையிட்டனர். 50 எதிர்ப்பாளர்கள் காயமடைந்தனர் மற்றும் இருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த சோதனைக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலியா பீரிஸ் கண்டனம் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனும் கவலை வெளியிட்டார்.

விக்ரமசிங்க தனது முன்னோடி ஆட்சியின் கடைசி சில நாட்களில் பொருளாதார மீட்சிக்கான அரசாங்கக் கொள்கைகளைத் தொடர்ந்தார். 2022ஆம் ஆண்டின் பிற்பகுதியில் IMF பிணை எடுப்புப் பொதியைப் பெறுவதற்கு அரசாங்க வருவாயை அதிகரிக்கும் நோக்கத்துடன், நேரடி வரிகளை அதிகரிக்கும் அதே வேளையில், நாட்டின் எரிசக்தி நெருக்கடியைக் கட்டுப்படுத்த அவரது நிர்வாகம் தொடர்ந்து, மின் விநியோகத்தை அறிமுகப்படுத்தியது. அத்துடன், எரிபொருள் விநியோகத்தை அறிமுகப்படுத்தியது. துறைகள். 2022 ஆம் ஆண்டில் இலங்கை அதன் பொருளாதாரத்தில் 11% சுருங்கியது, 2022 டிசம்பரில் பணவீக்கம் 54% ஆக உயர்ந்தது. 2023ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கை சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டு விழாவை நடத்தியதற்காக விக்ரமசிங்க விமர்சிக்கப்பட்டார். அதே நேரத்தில், நாடு பொருளாதாரத்திற்கு மத்தியிலிருந்தது. நெருக்கடி. 2023ஆம் ஆண்டு மார்ச் மாத தொடக்கத்தில் விக்ரமசிங்கே நிர்வாகத்தால் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியது. இலங்கைக்கான பிணை எடுப்புப் பொதியின் முதல் தவணையான 330 மில்லியன் அமெரிக்க டொலர்களை சர்வதேச நாணய நிதியம் அங்கீகரித்துள்ளதாக விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

IMF பிணை எடுப்பு உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் பிற கடன் வழங்குநர்களிடமிருந்து 3.75 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் கூடுதல் ஆதரவைத் திறக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது; 84 பில்லியன் டொலர் பெறுமதியான பொதுக் கடனில் கணிசமான பகுதியை இலங்கை மீள் வேலை செய்ய வழி வகுத்தது.

ஆகஸ்ட் 2024ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றம் ஒரு முக்கிய தீர்ப்பை வழங்கியது. அதில் நிதி அமைச்சர், முன்னாள் தலைவர் மற்றும் தேர்தல் ஆணையத்தின் உறுப்பினர்கள் மற்றும் சட்ட மா அதிபர் விக்ரமசிங்க, டாக்டர் ஹரிணி அமரசூரிய, எம்.பியின் இலங்கை அரசியலமைப்பின் கீழ், உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறினார். தேசிய மக்கள் சக்தியின் சமகி ஜன பலவேகயவின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கான மாற்றுக் கொள்கைகள் மற்றும் மக்கள் நடவடிக்கைக்கான மையம் (PAFFREL)2023ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டிய நேரத்தில் நடைபெறாததற்கு வழிவகுத்த தன்னிச்சையான மற்றும் சட்ட விரோதமான நடத்தை மூலம் இதற்குப் பதிலளிக்கும் விதமாக, உள்ளாட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதன் மூலம் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒப்புக்கொண்ட விக்ரமசிங்க, அந்த முடிவிற்கு வருந்தவில்லை என்று கூறியிருந்தார்.

2024ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்தே, 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் விக்ரமசிங்க தனித்துப் போட்டியிடுவாரா? என்று பல ஊகங்கள் கேள்வி நிலவி வந்தன. 2024ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், விக்ரமசிங்கே மீண்டும் தேர்தலில் போட்டியிடுவார் என்று சூசகமாக இருந்தார். ஆகஸ்ட் 2024இல் தேர்தல் அறிவிக்கப்பட்டதால், சுயேச்சை வேட்பாளராக மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாக விக்ரமசிங்க அறிவித்தார். அவர் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து பிரிந்த ஒரு பிரிவினரால் அங்கீகரிக்கப்பட்டார். அவர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் மகாஜன எக்சத் பெரமுனாவாலும் அங்கீகரிக்கப்பட்டார். இது விக்ரமசிங்கவின் ஜனாதிபதி பதவிக்கான மூன்றாவது முயற்சியாகும். அத்துடன் அவர், UNPயின் வேட்பாளராகப் போட்டியிடாதது முதல் முறையாகும்.

முதல் கட்ட வாக்கு எண்ணிக்கையின் முடிவில் விக்ரமசிங்கே வெளியேற்றப்பட்டு, 17.27% வாக்குகளை மட்டுமே பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்தார். வாக்கெடுப்பில் எந்த வேட்பாளரும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறாததால், தேர்தல்கள் இரண்டாம் கட்ட விருப்பு வாக்கு எண்ணிக்கைக்கு நகர்ந்தன, அங்கு இரண்டு முன்னணி வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிலிருந்தனர். நீக்கப்பட்ட வேட்பாளர்களின் இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பத்தேர்வுகள் முதல் இரண்டு வேட்பாளர்களான அனுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக எண்ணப்பட்டன. இரண்டாவது விருப்பத்தேர்வுகள் முடிவடைந்த நிலையில், அனுரகுமார திசாநாயக்க இலங்கையின் 9வது நிறைவேற்று ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டார்.

விக்ரமசிங்க, 2024ஆம் ஆண்டு செப்டெம்பர் 23 அன்று ஜனாதிபதி செயலகத்தை விட்டு வெளியேறினார், அவருக்குப் பின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற திசாநாயக்கவிற்கு அமைதியான முறையில் அதிகார மாற்றத்தை அனுமதித்தார்.





நடராஜா டிலுக்சன்,
2ஆம் வருட சிறப்புக் கற்கை மாணவன்,
பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# அதிகாரக் குவியத்தால் பாதிப்புக்குள்ளாகும் அறிவுக்குவியம்

அறிவு என்பது மனித குலத்தின் மிகப்பெரிய செல்வமாகும். இந்த அறிவே மனிதனின் அனைத்து அடிப்படை செயல்பாடுகளுக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாய் அமைகின்றது. மேலும், மனிதனது வாழ்க்கையில் பல சாதனையையும் உயர்வுகளையும் அடைய இந்த அறிவே பிரதானமான காரணமாய் அமைகிறது. அந்த வகையில், அறிவை பரிணாம முறையில் வளர்ச்சி அடையச் செய்யும் ஒரு களமாகப் பாடசாலை காணப்படுகின்றது. பாடசாலையில் முறையாகப் பெறப்படாத அறிவு மனித வாழ்க்கையில் பல சவால்களை எதிர்நோக்க வழிவகுக்கின்றது. இதனால் அறிவு என்பது அனைத்துக்கும் ஒரு அடிப்படை என்றே கூற முடியும். ஆனால், இந்த அறிவுக் குவியம் பெரும்பாலும் அதிகாரக் குவியத்தால் பாதிக்கப்படுவது வருத்தத்திற்குரிய விடயமாகும். இந்த அதிகார குவியத்தின் ஆதிக்கம் பல பாடசாலை மட்டங்களில் அதிபர்களாலும் ஆசிரியர்களாலும் மேற்கொள்ளப்பட்டு மாணவரின் அறிவுக்குரியத்தை பாதிப்படையச் செய்கின்றன. இவ்வாதிகார ஓவியம் அறிவின் பரிணாம வளர்ச்சியைத் தடுத்து நிறுத்திய சமூகம் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது ஒரு துரதிஷ்டவசமாக உண்மை

'அதிகார குவியம்' என்பது குறிப்பிட்ட குழு அல்லது நபர் மற்றவர்கள் மீது செல்வாக்கு அல்லது கட்டுப்பாடு விதிப்பது ஆகும். இவ்வதிகாரம் சில சமயங்களில் நியாயமான முறையில் பயன்படுத்தப்பட்டாலும், கல்வி மற்றும் அறிவை மேம்படுத்தச் செயற்பாட்டில் தவறாகவே பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாகப் பாடசாலை மட்டங்களில் கற்றல் கற்பித்தல் செயல்பாட்டின் போது, அதிகாரம் படைத்த ஆசிரியர்கள் நிர்வாகிகள் மாணவர்களிடையே ஏற்படுத்தும் அதிகார குவிப்பு மாணவர்களின் அறிவு வளர்ச்சியை பல்வேறு வழிகளில் பாதிப்படையச் செய்கின்றன.

பாடசாலை களத்தில் அதிகாரத்தை மாணவர் மத்தியில் ஆசிரியர்கள் பயன்படுத்தக் காரணம், தாங்கள் உயர்நிலையில் காணப்படுகின்ற எண்ணமே ஆகும். மாறாக மாணவரை தங்கள் கட்டுப்பாட்டினுள் வைத்து அவர்களின் நல் வாழ்விற்கு வழிகாட்டுபவராகச் செயல்படவும் பிரதானமாக ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் அதிகாரத்தைப் பிரயோகிக்கின்றார்கள். இதனால் ஆசிரியர் மாணவரின் இலக்குகளை அடையச் செய்யவே இவ்வாறு அதிகாரத்தைப் பிரயோகிக்கின்றார்கள் என கூறினாலும், அது பல்வேறு மட்டங்களில் மாணவரின் கல்வி செயல்பாடுகளையும், அவர்களின் ஆளுமை வளர்ச்சிகளையும் சமூகத் திறன்களையும் வலுவிழக்கச் செய்கின்றது.

ஆசிரியரின் அதிகமான அதிகாரம், மாணவர்களின் சுதந்திரமான சிந்தனைக்குத் தடையாகக் காணப்படுகின்றது. இதனால் மாணவர்களின் படைப்பாற்றல் தடை பெறுகின்றது. இதன்போது, மாணவர்கள் ஆசிரியரிடம் தங்கள் சொந்த கருத்துக்களை வெளிப்படுத்தப் பயப்படலாம். இதனால் புதிய ஒரு விடயத்தைச் சிந்திக்கும் திறன் மாணவர்களிடம் தடைப்பட்டு புதிய யோசனைகள் உருவாகாமல் போகின்றது. அதேபோல், மாணவர்கள் தங்களது சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள ஆசிரியரிடம் வினாக்களைக் கேட்கவும் பயம் கொள்வதுடன், அவர்களின் படைப்பாற்றல் தடைபடுகின்றது.

மேலும், ஆசிரியரின் கட்டுப்பாடற்ற அதிகார குவியமானது, மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைக் குறைக்கின்றது. அதாவது, ஒரு மாணவன் கற்றல் செயல்பாடுகளில் சிறு தவறுகளை இழைத்தாலும், அதனைச் சரி செய்யும் பொறுப்பு ஆசிரியரிடமே காணப்படுகிறது. ஆனால், அதிகாரத்தைப் பயன்படுத்திச் சிறு தவறுகளை இழைத்தாலும், மாணவர்களுக்குத் தண்டனையை வழங்கும் ஆசிரியர்களால் மாணவர்களுக்கு அதிக மன அழுத்தம் ஏற்படுகின்றது. அது மட்டுமல்லாமல், மாணவர்கள் வகுப்பறையில் முன் வரவும் புதிய விடயங்களை கற்கவும் அச்சப்படுவர். இதன் மூலம் அவர்களின் கற்றல் ஆர்வம் குறைவதற்குக் காரணமாய் அதிகார குவியம் காணப்படுகின்றமை புலனாகின்றது.

பாடசாலையில் ஆசிரியர்கள் மாணவர்களை அதிகாரத்துக்கு உட்படுத்துவதால், சமூக ரீதியான உறவுகளை நாடுகின்ற நாட்டம், சமூக கற்றல் பிறருக்கு மரியாதை அளித்தல் போன்ற பண்புகள் மாணவர் மத்தியில் வளர்க்கப்படாமல், நெறி பிறழ்வான மாணவர்களாக உருவாகக் காரணமாய் அமைகின்றது. மாணவர்கள் பாடசாலை வாழ்நாளில் தங்களது தாய் தந்தைக்கு மேலாக அதிகமாக ஆசிரியர்களுடனேயே தனது நேரங்களை செலவிடுகின்றனர். இதன்போது, ஆசிரியர்-மாணவர் அன்பாக வழி நடத்தாமல் அதிகார பிரயோகத்தைப் பயன்படுத்துகின்றபோது, மாணவர்கள் அந்த குறிப்பிட்ட ஆசிரியரின் நடத்தையைத் தொடர்ந்தும் அவதானிக்கின்றனர். இதனால் மாணவர்கள் சமூகத்திற்குப் பழக்கப்படும் போது, ஆசிரியரின் நடத்தையே கருதிக்கொண்டு தனக்குக் கீழ் உள்ளவர்களைக் கட்டுப்படுத்த எண்ணுகின்றனர். அதேபோல், அந்த அதிகாரம் தங்களுக்கு நிகரானவர் யாருமில்லை, தாங்கள் செய்யும் செயல்கள் யாவும் சரியானவை என சிந்திக்க வைத்து மற்றவர்களுக்கு மரியாதை வழங்க முடியாத அல்லது பழக்கப் பழக்கப்படாத நெறிபிறழ்வான பிரஜையாக உருவாக்கப்படுகின்றனர்.

கல்வி என்பது மாணவர்களின் உரிமை. இந்த உரிமையானது, மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப வழங்கப்படுதல் அவசியம். ஆனால், அவர்களின் விருப்பத்திற்கு எதிராகவும் கட்டுப்படுத்தியும் கல்வியை ஆசிரியர் போதிக்கும் போது, கற்றலில் மாணவர்களுக்கு விருப்பமின்மை ஏற்படுகின்றது. அவர்களின் கல்வி உரிமை ஆசிரியரின் அதிகார பிரயோகத்தால் பாதிப்புக்கு உள்ளாகின்றது. இதனால் மாணவர்கள் கற்றல் செயல்பாடுகளில் அக்கறை செலுத்தாதவர்களாகவும் கல்வி அறிவை பெற முடியாதவர்களாகவும் உருவாக்கப்படுகின்றனர்.

பாடசாலையில் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு அழுத்தம் அச்சத்திற்கு உள்ளாகும் மாணவர்கள் பாடசாலை சூழ்நிலை இருந்து விடைபெற்று சமூக வாழ்க்கை ஆரம்பிக்கும் போது, பிறரை பார்த்து அச்சப்படுகின்றனர். இதனால் தங்களது வாழ்க்கையில் சுய தீர்மானம் எடுக்கவும் துணிவோடு செயல்படவும் ஆளுமை இல்லாதவர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இதற்குக் காரணம், ஆசிரியர்களின் அதிகாரம் எனும் இருள் மாணவர்களின் மனதில் சூழ்ந்து காணப்படுவது ஆகும். விரலை மாணவர் மனதிலிருந்து நீக்கி அவர்களை சமூகத்திற்கு ஒரு பிரச்சினையாகவும் ஆளுமைகளை உடையவர்களாகவும் உருவாக்க ஆசிரியரின் அதிகார பிரயோகம் குறிப்பிட்டு சில விடயங்களில் மாத்திரமே காணப்பட வேண்டும்.

ஆசிரியரின் அதிகாரக் குவியத்தால், பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தக் கூடிய பல்வேறு தத்துவவியலாளர்களின் தத்துவ கருத்துக்கள் நிறைந்த திட்டங்கள் சவால் நிலைக்கு உட்படுகின்றன. உதாரணமாகக் குழந்தை பூங்கா, இதில், குழந்தைப் பூங்கா முறையின் தந்தை என போற்றப்படும் பிரோபலின் பிரதான கருத்து, ஒரு தோட்டத்தில் பூக்களை வளர்க தோட்டக்காரன், அந்த பூச்செடிகளைச் சரியாகப் பராமரிக்க வேண்டும். இதே போல், தோட்டமாகப் பாடசாலையும், தோட்டத்தில் காணப்படும் செடிகளாக மாணவர்களும், தோட்டத்தில் உள்ள பூச்செடிகளைப் பராமரிக்கும் தோட்டக்காரன் போல், பாடசாலை களத்தில் மாணவர்களின் முறையாக வளரச் செய்பவர்களாக ஆசிரியரும் காணப்பட வேண்டும் என கூறுகின்றார். இதன் மூலம் கூறக்கூடிய கருத்து என்னவென்றால், மாணவர்களை, ஆசிரியர் முறையாக வளரச் செய்வதற்கு அவர்களை அன்பாக அக்கறை கொண்டு செயல்படுத்த வேண்டும். இதனால் மாணவர்கள் முறையாக நெறிபிறழ்வற்ற மாணவர்களாக உருவாக்கப்படுகின்றனர். அதிகார குவியம் இடம்பெற்று ஆசிரியர்கள் அதிகாரத்தைக் கூடுதலாகப் பிரயோகிக்கும் போது, மாணவர்கள் ஆசிரியருடன் இணைந்து ஈடுபடாதவர்களாகவும் ஒரு அறிவான விடயங்களைப் பெற்றுக்கொள்ள ஆசிரியரிடம் தயக்கம் தெரிவிப்பவர்களாக உருவாக்கப்படுகின்றனர். மேலும், இந்த அதிகார குவியமானது, ஆசிரியர் மையக் கல்வியிலும், மாணவர் மையக் கல்வியிலும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது.

அதாவது, ஆசிரியர் மையக் கல்வியில் மாணவர்களானவர் ஆசிரியரின் மீது தங்கியிருப்பார். இந்த நிலையில், ஆசிரியர்கள், மாணவர்களை அதிகாரத்தைப் பிரயோகிப்பது மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கு இடையேயான உறவில் இணக்கப்பாட்டைக் குறைத்து விரிசலை ஏற்படுத்தும். இதனால் ஒரு விடயத்தை ஆசிரியரிடம் கேட்டு அறிய மாணவர்கள் பயம் கொள்வர்.

மாணவர் மையக் கல்வியென்னும் போது, மாணவர்கள் கல்வி செயற்பாட்டில் தேடி கற்றல் பிரதானமாகக் காணப்படுகின்றது. ஆனாலும், மாணவர்களை மதிப்பீட்டுச் செய்ய ஆசிரியரின் உதவி மற்றும் தேவைப்பாடு காணப்படுகின்றது. இந்த நிலையில், ஆசிரியர்களின் அதிகாரம் படைத்தவர்களாகவும் மாணவர்களிடம் கட்டுப்பாட்டு விதிப்பவர்களாகவும் காணப்படும் போது, மாணவர்கள் ஆசிரியரோடு தொடர்பு கொள்ள அச்சப்படுவது, இதனால் மாணவர்களின் பிழையான தேடலாக இருந்தாலும், அதனைத் தெளிவுபடுத்த முடியாத நிலையை அதிகாரக் குவியம் ஏற்படுத்துகின்றது.

இதனால் இறுதி வரை ஒரு விடயம் தொடர்பாகத் தெளிவற்ற மற்றும் பிழையான புரிந்துணர்வுடன் தொடர்ச்சியாகச் செயல்பட வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றது.

# 28ஆவது பொது பட்டமளிப்பு விழா

பேரின்பராஜா சபேஷ்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2023ஆம் ஆண்டிற்கான 28ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழகத்தின் நல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில் வேந்தர் ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.செல்வராஜா தலைமையில் சனிக்கிழமை (05) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்றது.

இந்நிகழ்வில், இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் (யாழ்ப்பாணம்) ஸ்ரீ சாய் முரளி பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இரு தினங்கள் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், 2340 உள்வாரி, வெளிவாரி, கலாநிதி மற்றும் பட்டப் பின் படிப்பு பட்டங்கள் வழங்கப்பட்டன.

பட்டமளிப்பு விழாவின் சனிக்கிழமை 1ம் நாளில் முதலாவது அமர்வின் போது, இரு கலாநிதிப்பட்டம், ஒரு முதுதத்துவமாணி இரு விஞ்ஞான கல்வியில் முதுமாணி, ஒரு விவசாய விஞ்ஞானத்தில் முதுமாணி, 58 கல்வியியல் முதுமாணி, 04 கலை முதுமாணி, 05 வியாபார நிர்வாக முதுமாணி, 31 அபிவிருத்தி பொருளியல் முதுமாணி, மற்றும் 153 இளங்கலைமாணி பட்டங்கள் (வைத்தியமாணி,சத்திரசிகிச்சைமாணி, சிறப்பு தாதியியல் விஞ்ஞானமாணி, தாதியியல் விஞ்ஞானமாணி, சிறப்பு விவசாய விஞ்ஞானமாணி, விவசாய விஞ்ஞானமாணி) பட்டங்கள் வழங்கப்பட்டன.

வணிக நிர்வாகமாணி, சிறப்பு வணிக நிர்வாகமாணி, சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக நிர்வாகமாணி, மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வணிக நிர்வாகமாணி, சிறப்பு வணிகவியல்மாணி, வணிகவியல்மாணி, கணக்கீடு மற்றும் நிதியியல் சிறப்பு வணிகவியல் மாணி, வணிக பொருளியல் சிறப்பு வணிகவியல் மாணி, விஞ்ஞானமாணி, சிறப்பு விஞ்ஞானமாணி, எனும் வகையில் 333 பட்டங்களும், சித்தமருத்துவம் - சத்திர சிகிச்சை இளமாணி, சிறப்பு விஞ்ஞானமாணி, கணினி விஞ்ஞானமாணி விவசாய தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மையில் உயிர்முறைமைகள தொழில்நுட்ப கௌரவ இளமாணி, தொடர்பாடல் கற்கைகளில் கலைமாணி, மொழியியல் கலைமாணி, எனும் வகையில் 424 பட்டங்களும்,

மற்றும் நுண்கலைமாணி - இசை, நுண்கலைமாணி- நடனம், நுண்கலைமாணி - நாடகமும் அரங்கியலும், நுண்கலைமாணி - கட்புலமும் தொழிநுட்பவியல் கலையும் எனும் வகையில் 204 பட்டங்களும் முதலாம் நாளில் 2ஆவது, 3ஆவது, 4ஆவது அமர்வுகளில் வழங்கப்பட்டன.

கல்விமாணி, மற்றும் கலைமாணி (விசேட பட்டம்) எனும் வகையில் 321 பட்டங்களும் கலைமாணி (பொதுப்பட்டம்), எனும் வகையில் 740 பட்டங்களும் வியாபார முகாமைத்துவமாணி (வெளிவாரி) எனும் வகையில் 61 பட்டங்களும் 2ம் நாளின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் அமர்வுகளில் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டன.


























சென்னை

# சாகச நிகழ்ச்சியில் ஐவர் உயிரிழப்பு

இந்திய விமானப்படையின் 92ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை (06) இந்திய விமானப்படையின் சாகச நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனிடையே, விமான சாகச நிகழ்ச்சியை 10 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கண்டு களித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குடிநீர், உணவு, கழிப்பிடம், போக்குவரத்து உட்பட அடிப்படை வசதிகள் போதிய அளவில் செய்யப்படவில்லை என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டினர். கடுமையான வெயிலாலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.



இந்நிலையில், மெரினாவில் விமான சாகச நிகழ்ச்சியை பார்க்க சென்ற 5 பேர் உயிரிழந்துள்ளனர். 240 பேர் மயக்கமடைந்தனர். அத்துடன், 90ற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொல்கத்தா

## ஆடைக்காக செல்கையில் கழிவறையில் வன்புணர்ந்தார்

கொல்கத்தா நகரிலுள்ள பொலிஸ் நிலையத்தில் தன்னார்வலராக பணி புரியும் பெண்ணை பாலியல் வன்புணர்வு செய்த சப்-இன்ஸ்பெக்டர் மீது துறை ரீதியான விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், 2017ஆம் ஆண்டு முதல் பெண் குடிமைத் தன்னார்வலர் ஒருவர் பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், தன்னை பொலிஸ் நிலைய சப்-



இன்ஸ்பெக்டரால் பாலியல் வன்புணந்த்தாக பெண் தன்னார்வலர் புகார் அளித்துள்ளார். அந்த புகாரில், சனிக்கிழமை (5) அதிகாலை 1.10 மணியளவில் பொலிஸ் நிலையத்தின் 4ஆவது மாடியில் துர்கா பூஜைக்கு ஆடைகளைப் பரிசாக கொடுப்பதாகக்கூறி, அழைத்துச் சென்று அங்கு தன்னை கட்டாயப்படுத்தி கழிவறைக்குள் இழுத்துச் சென்று பாலியல் வன்புணர்வு செய்ததாக அதில் தெரிவித்திருந்தார்.

இந்த புகாரின் அடிப்படியில் சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் மீது துறை ரீதியான விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசம்

6 வருடமாக வராத ஆசிரியை

## தவறாமல் ஊதியம் பெற உதவியவர் நீக்கம்




உத்தரப் பிரதேசம் மீரட்டில் ஒரு ஆசிரியை, கடந்த 6 வருடங்களாக அரசு பாடசாலைக்கு வாராமல் இருந்துள்ளார். தனது ஊதியம் மட்டும் தவறாமல் பெற்றவருடன் அதற்கு உதவிய பாடசாலை முதல்வரும் பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

உத்தரப் பிரதேசத்தின் மீரட்டில் பரிட்ஷித்கர் எனும் பகுதியில் ஒரு நடுநிலைப்பள்ளி செயல்படுகிறது. இதில், ஆசிரியையாக பணியமர்ந்த சுஜாதா யாதவ் என்பவர் பல ஆண்டுகளாகப் பாடசாலைக்கு வராமல் இருந்துள்ளார்.

இதனால், அவரது வகுப்புகளுக்கு ஆசிரியர் இன்றி மாணவர்கள் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர்.

ஆசிரியையான சுஜாதா யாதவ் கடந்த 2,920 நாட்களுக்கு முன் அப்பாடசாலையில் பணியில் அமர்ந்ததாகத் தெரிந்தது.

இந்த 2,920 நாட்களில் ஆசிரியை சுஜாதா, வெறும் 759 நாட்கள் மட்டுமே பாடசாலைக்கு வந்துள்ளார் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கான விடுப்புகள் எதுவுமே அவர் எடுக்கவில்லை.

இஸ்ரேல்

# "வெற்றி நமக்கே"

## இஸ்ரேல் இராணுவ வீரர்களிடம் நெதன்யாகு உறுதி

இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடந்து இன்றுடன் (ஒக்டோபர்-07) ஓராண்டு நிறைவடைகிறது. இதனை முன்னிட்டு லெபனான் எல்லையில் இருக்கும் இஸ்ரேல் இராணுவ முகாம்களை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஞாயிற்றுக்கிழமை (06) பார்வையிட்டார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தளத்தில் அவர் கூறியிருப்பதாவது, "வடக்கு எல்லையில் இருக்கும் இஸ்ரேல் பாதுகாப்புப் படை வீரர்களை சந்தித்தேன். அங்கிருந்து சில மீட்டர்கள் தொலைவில் எல்லைக் கோட்டுக்கு அப்பால், அவர்களின் நண்பர்கள், ஹிஸ்புல்லா அமைப்பினர் எங்களுடைய முகாம்களை தாக்குவதற்காக தயார் செய்த உள்கட்டமைப்புகளை தகர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

நான் அவர்களிடம்



சொன்னேன். நீங்கள்தான் வெற்றி நாயகர்கள். நீங்களும் உங்கள் நண்பர்களான இஸ்ரேல் பாதுகாப்புப் படை வீரர்களும், காசாவில் உள்ள வீரர்களும் அற்புதங்களை உருவாக்குகிறீர்கள். நீங்கள் சிங்கங்களைப் போன்றவர்கள்.

ஓராண்டுக்கு முன்பு நாம் மிகப்பெரிய தாக்குதலுக்கு உள்ளானோம். கடந்த 12 மாதங்களில் நாம் எதார்த்தத்தை முழுமையாக மாற்றியிருக்கிறோம். நமது எதிரிகளின் மீது நீங்கள் கட்டவிழ்க்கும் தாக்குதலைக் கண்டு ஒட்டுமொத்த உலகமும் சிரிக்கிறது. உங்களுக்கு என்னுடைய வீரவணக்கம். வெற்றியின் தலைமுறையினர் நீங்கள் என்பதை நான் உங்களிடம் சொல்லிக் கொள்கிறேன். ஒன்றிணைந்து போராடுவோம். கடவுளின் உதவியால் வெற்றி நமக்கே" என நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

பிரிட்டன்

## விசித்திர திருடன்

பிரிட்டனில் கார்டிப் [Cardiff] நகரில் தனியாக வசித்து வரும் பெண் ஒருவரின் வீட்டில் திருடுவதற்காக 36 வயது திருடன் உள்ளே நுழைந்துள்ளான்.

பெண் வீட்டில் இல்லாத போது குறித்த திருடன், வீட்டை சுத்தப்படுத்தி, சமையல் செய்து, துணிகளைத் துவைத்து அதைக் காயப்போட்டு விட்டுச் சென்றுள்ளார்.

வீட்டை விட்டு வரும்போது, "டோன்ட் வொரி, பி ஹாப்பி, நன்றாக சாப்பிடுங்கள்" என்று எழுதி வைத்து விட்டும் சென்றுள்ளார்.

மேலும், திருடன் கைது செய்யப்பட்டதோடு, சிறுவயது முதலே தங்க வீடில்லாமல் பல கஷ்டங்களுக்கு உள்ளாகியவர் என அவரது



சட்டத்தரணி தெரிவித்தார். இதுதொடர்பாக நீதிமன்றத்தில் அவர் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலாவது போட்டியில்

# பங்களாதேஷை வீழ்த்திய இந்தியா




பங்களாதேஷுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், குவாலியூரில் ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்ற முதலாவது போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

பங்களாதேஷ்: 127/10 (19.5 ஓவ.) (துடுப்பாட்டம்: மெஹிடி ஹஸன் மிராஸ் ஆ.இ 35 (32), நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ 27 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: அர்ஷ்டீப் சிங் 3/14 [3.5], வருண் சக்கரவர்த்தி 3/31 [4], வொஷிங்டன் சுந்தர் 1/12 [2], மாயங்க் யாதவ் 1/21 [4], ஹர்திக் பாண்டியா 1/26 [4])

இந்தியா: 132/3 (11.5 ஓவ.) (துடுப்பாட்டம்: ஹர்திக் பாண்டியா ஆ.இ 39 (16), சூரியகுமார் யாதவ் 29 (14), சஞ்சு சாம்ஸன் 29 (19), அபிஷேக் ஷர்மா 16 (07), நிதிஷ் குமார் ரெட்டி ஆ.இ 16 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: மெஹிடி ஹஸன் மிராஸ் 1/7 [1]) போட்டியின் நாயகன்: அர்ஷ்டீப் சிங்

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## பியொரென்டினாவிடம் தோற்ற மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், பியொரென்டீனாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 1-2 என்ற கோல் கணக்கில் ஏ.சி.மிலன் தோற்றது.

மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிறிஸ்டியன் புலிசிச் பெற்றதோடு, பியொரென்டீனா சார்பாக யசின் அடில், அல்பேர்ட் குமுன்ட்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில் மொன்ஸாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் றோமா சமப்படுத்தியது. றோமா சார்பாகப் பெறப்பட்ட கோலை அர்டெம் டொவ்பிக் பெற்றதோடு, மொன்ஸா சார்பாகப் பெறப்பட்ட கோலை டனி மோட்டா பெற்றார்.

இதேவேளை தமது மைதானத்தில் நடைபெற்ற கைகரியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை டுஸன் விளாகோவிச் பெற்றதோடு, கைகரி சார்பாகப் பெறப்பட்ட கோலை றஸ்வன் மரின் பெற்றிருந்தார்.




இலங்கையின் முழுநேர தலைமைப் பயிற்றுவிப்பாளராக

## ஜெயசூரிய நியமிப்பு

சர்வதேச கிரிக்கெட் சபையின் 2026ஆம் ஆண்டு இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரின் முடிவு வரையில் இலங்கையின் ஆண்கள் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக சனத் ஜெயசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாண்டு ஜூலை மாதம் ஆரம்பம் முதல் இலங்கையின் பயிற்றுவிப்பாளராக ஜெயசூரியா இருக்கின்றபோதும் தற்காலிக அடிப்படையிலேயே பணியாற்றியிருந்தார். இந்நிலையில், அப்பதவியில் சிறப்பாகச் செயற்பட்ட நிலையிலேயே அவருக்கு முழுநேர பதவியை இலங்கை கிரிக்கெட் சபை வழங்கியுள்ளது.

ஜெயசூரியாவின் கீழ் கடந்த சில மாதங்களில் இந்தியாவுக்கெதிராக 27 ஆண்டுகளில் முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை இலங்கை வென்றதுடன், இங்கிலாந்து மண்ணில் டெஸ்டொன்றை 10 ஆண்டுகளில் முதற்தடவையாக வென்றதுடன், நியூசிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரை 2-0 என வென்றிருந்தது.



இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## முன்னிலையில் பாகிஸ்தான்

இங்கிலாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டின் முதல் நாளில் முன்னிலையில் பாகிஸ்தான் காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முல்தானில் திங்கட்கிழமை (07) ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தானின் அணித்தலைவர் ஷண் மசூட் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், ஆரம்பத்திலேயே சைம் அயூப்பை குஸ் அட்கின்ஸனிடம் இழந்தது. பின்னர் மசூட்டும், அப்துல்லாஹ் ஷஃபிக்கும் ஓட்டங்களைக் குவித்தனர். இந்நிலையில் 102 ஓட்டங்களுடன் அட்கின்ஸனிடம் ஷஃபிக்கும், 151 ஓட்டங்களுடன் ஜேக் லீச்சிடம் மசூட்டும் குறுகிய இடைவெளியில் வீழ்ந்தனர். பின்னர் பாபர் அஸாமும், சௌட் ஷகீலும் இனிங்ஸை நகர்த்திய நிலையில், கிறிஸ் வோக்ஸிடம் 30 ஓட்டங்களுடன் அஸாம் வீழ்ந்தார். முதலாம் நாள் முடிவில் தமது முதலாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்து 328 ஓட்டங்களை பாகிஸ்தான் பெற்றுள்ளது. களத்தில் சௌகீல் 35 ஓட்டங்களுடனும், நசீம் ஷா ஓட்டங்கள் பெறாமல் உள்ளனர்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்

## பிறைட்டனிடம் தோற்ற டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது.

டொட்டென்ஹாம் சார்பாக பிரென்னன் ஜோன்சன், ஜேம்ஸ் மடிஸன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பிறைட்டன் சார்பாக யன்குபா மின்டெஹ், ஜோர்ஜினியோ ருட்டர், டனி வெல்பக் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற நொட்டிங்ஹாம் பொரெஸ்டுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியது. செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை நொனி மதுக்கே பெற்றதோடு, நொட்டிங்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிறிஸ் வூட் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 08 ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.